www.tamilarangam.net

தந்துதவியவர்: தேசம்நெற்


# ஈழபூமி

The Eelabhoomi

Donation : U.K .60P France 10ff

ஆண்டு 02 13-03-94 - 26-03-94 இலக்கம் 06


## ஜனாதிபதி மாளிகைக்குள் கத்தியுடன் நுழைந்தவர் கைது

(கொழும்பு)

கடந்த புதன்கிழமை சந்தேகத்தின் பேரில் ஒருவர் ஜனாதிபதி மாளிகைக்குள் நுளைந்த ஒருவரை விசேட பொலீஸார் கைது செய்துள்ளனர். பலத்த பாதுகாப்புள்ள இந்த மாளிகைக்குள் இவர் எப்படி நுழைந்தார் என பலரும் கேள்வி எழுப்பியுள்ளனர். இதனை அடுத்து மாளிகை பாதுகாப்பதிகாரிகள் பலத்த விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

## தேர்தல் குளத்தில் தமிழ் குழுக்களின் குத்துக்கரணம்

தேசியக் கட்சியிடம் சரணடைவதா
– புளட்
அரசுக்கு பாடம் புகட்டுவோம்
– ரெலோ
வடக்கையும் கிழக்கையும் இணைப்போம்
– ஈ.பி.டி.பி
போடுங்கள் எமக்கு புள்ளடி
இன்றேல் கிடைக்கும் செல்லடி

(தேர்தல் றிப்போட்)

வவுனியா, திருமலை, மட்டு நகர் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடந்து முடிந்து விட்டது. தமிழீழத் தாயகத்தை இரண்டாகப் பிரிக்கவும், உலக அரங்குக்கு பம்மாத்துக் காட்டவும் எத்தனித்தது யுஎன்பி. அரசு. இணைந்து போனார்கள் தமிழ் தம்பிகள். 18 ஆசனங்களாகவும், 431 பிரதி நிதிகளை தெரிவு செய்யும் 40 கவுன்சில்களில் தேர்தல் நடைபெற்றது. மொத்தமாக உள்ள 40 பிரிவுகளில் யுஎன்பி 18 கவுன்சில்களையும் எஸ்.எல்.எவ்பி மூன்று ஆசனங்களையும், முஸ்லிம் காங்கிரஸ் ஆறு கவுன்சில்களையும் பதின் மூன்று கவுன்சில்களை ஏனைய தமிழ் குழுக்களும் பெற்றுள்ளன.

தேர்தல் ஒன்றை நடாத்துவதன் மூலம் பல காய்களை ஒரு எறிபிலே எதிர் பார்த்து யு.என்.பி.க்கு குறைந்தது சில காய்கள் கிடைத்தது அறியக் கூடியதே.

நடக்க இருக்கும் பொதுத் தேர்தல், ஜனாதிபதி தேர்தல்களின் முன் மாதிரிக்கு கணிப்பீடும். வடக்கு கிழக்கு இணைப்புக்கு முன்மாதிரி ஒத்திகை வெளிநாட்டுக் கண்களுக்கு அமைதி நிலவுகிறது என்ற மாயையை உண்டு பண்ணுதலே யு.என்.பியின் காய்களாய் இருந்தன.

தமிழருக்கு அழிவு எப்போதும் தமிழரால் தான் ஏற்பட்டது. உள்ளூராட்சித் தேர்தல்களிலும் அவ்வாறு தான் நடைபெற்றது என்பதை யாவரும் அறிவர்.

வடக்கையும் கிழக்கையும் இணைக்கவே தேர்தலில் நிற்பதாக கூறிக் கொண்ட தமிழக் குழுக்கள் தங்களுக்குள் மோதிக் கொண்டதும் பின் ஒற்றுமையில் ஏற்பட்ட அடிபிடியே என்று அறிக்கை விட்டது. ஒரு புறமிருக்க தேர்தலில் கலந்து கொண்டதன் மூலம் புலிகளுக்கு மட்டுமல்ல தமிழிழத்தின் அனைத்து மக்களுக்குமே தாம் துரோகிகள் தான் என்பதை தெட்டத் தெளிவாகக் காட்டிக் கொண்டன இத் தமிழ் குழுக்கள்.

அரசு இராணுவத்திற்கு எடுபிடிகளாக செயல்பட்டு வந்த ரெலோவும் புளட்டும் பொது மக்களுக்கு செய்த துன்பங்கள் சொல்லிலடங்காதவை. பெண்களை கடத்தி காட்டிக் கொடுப்பது வரை மட்டங்களகாவே தம் கை வரிசையை காட்டிய ரெலோ கைகளை கூப்பிய வண்ணம் வாக்கு கேட்டது. புள்ளடி போடுங்கள் என்று கெஞ்சியது. போடுங்கள் புள்ளடி இல்லையேல் செல்லடி என்று இராணுவம் மிரட்டியது. தேர்தலில் நின்றால் சுட்டுத் தள்ளுவோம் என்ற சுட்டும் காட்டியது புலி. எங்களுக்கு ஆதரவு அளிக்கவிட்டால் தேர்தல் முடிய என்ன நடக்கும் என்பதை ஊகித்துக் கொள்ளுங்கள் என்று மிரட்டியதாம்.

(தொடர்ச்சி 2ம் பக்கத்தில்)

## கனடாவின் சமாதான முயற்சி இலங்கையால் எதிர்க்கப்பட்டது

(மார்ச் 6)

புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர எடுக்கப்பட்ட முயற்சிகள் அனைத்தும் இலங்கை அரசினால் ஏற்க மறுக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா ஜனாதிபதி டிங்கிரி பண்டர விஜயதுங்கா மேற்படி வெளிநாட்டு தலையீட்டை மறுத்ததாக சண்டே ஒப்சேவர் என்ற கொழும்புப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கனடா பாரளுடன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்று புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் சமாதானத்தை ஏற்படுத்தி பிரச்சினைக்கு தீர்வுகாண எடுத்த முயற்சியை இலங்கை அரசு

## தனியார் மயமாகும் தோட்டங்கள் மலையக மக்களுக்கான வேட்டுக்கள்

(நமது நிருபர்)

இலங்கையின் தேயிலை, ரப்பர் தோட்டங்கள் தனியார் மயப்படுத்தல் முதல் பிரிவு வெற்றிகரமாக அமைந்துள்ளது என்று விஜய துங்கா குறிப்பிட்டுள்ளார். அடுத்தக் கட்ட தனியார் மயப்படுத்தல் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றும் ஜனாதிபதி அண்மையில் குறிப்பிட்டுள்ளார்.

1993 முதல் ஆறு மாதங்களில் தேயிலை உற்பத்தி 117 மில்லியன் கிலோவினால் அதிகரித்தது. மிகுதி அரை ஆண்டில் இந்தத் தொகை 230 மில்லி கிலோ கிராமினால் ஆக கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முதல் கட்ட தனியார் மயப்படுத்தல். ஜூலை 1992 இல் ஆரம்பிக்கப்பட்டது. 1972ம் ஆண்டு ஸ்ரீமா பண்டார நாயக்க தலையிலான கூட்டரசினால் தேசிய மயப் படுத்தப்பட்ட இந்த தோட்ட நிர்வாகங்கள் 22 நிர்வாகக் கம்பனிகளால் நடத்துவதற்கு கையொப்பமிடப்பட்டது.

ஸ்ரீமாவின் அரசு பெருந்தோட்டத் தொழிற் துறை அமைச்சராக இருந்தவர் இடது சாரி நிலைப்பாடு கொண்டவராவார். இதுவே பிரேமதாஸவின் அரசில் விட்டுக் கொடுப்புக்கு காரணமாய் இருந்தது.

(தொடர்ச்சி 2ம் பக்கத்தில்)

## மன்னாரில் புலிகள் தாக்குதல் ஐந்து பொலீசார் பலி

(நமது நிருபர்)

மன்னாரில் உள்ள ஸ்ரீ லங்கா பொலீஸ் நிலைய மொன்றை விடுதலைப் புலிகள் தாக்கியுள்ளனர். இத்தாக்குதலில் நாலு பொலீஸார் கொல்லப்பட்டதாகவும் பலர் படுகாயமடைந்து ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கடந்த வியாழன் இரவு பன்னிரண்டு மணியளவில் நடைபெற்ற இத் திடீர்தாக்குதலில் ஐவர் பலயானதாகவும் தம்மை எதிர்கொள்ள முடியாமல் பலர் காயங்களுடன் தப்பியோடிவிட்டனர் என்று விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். கடந்த வாரம் வவுனியாவில் நடை பெற்ற தாக்குதலில் பல புலி வீரர்கள் பலயானது யாவரும் அறிந்ததே. இதற்கு பழி வாங்கும் ஒரு நடவடிக்கையாகவே இத் தாக்குதலை புலிகள் நடாத்தியதாக அரசு தெரிவித்துள்ளது. முகாமை தாக்கிய புலிகள் ஒருவரின் தலையை வெட்டி எடுத்துச் சென்றுள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளது.

இத் தாக்குதலில் பல ரீ56 துப்பாக்கிகள், ரவைகள், கைக்குண்டுகளைத் தாம் கைப்பற்றியுள்ளதாக புலிகள் தெரிவித்துள்ளனர்

## திருப்பி அனுப்ப சுவீடன் முடிவு தமிழர் தீயிட்டு தன்னைக் கொழுத்தினார்.

(நமது நிருபர்)

சுவீடன் குடிவரவுத் திணைக்களம் தமிழ் அகதி ஒருவரைத் திருப்பி அனுப்ப எடுத்த முடிவை அடுத்து தன்னைத் தானே பெற்றோல் ஊற்றி கொழுத்திக் கொண்டார். 3ம் திகதி இம் மாதம் இடம் பெற்ற இச்சம்பவம் சுவீடன் வாழ் தமிழ் மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

அப்சல என்னும் இடத்தில் அமைந்துள்ள மருத்துவ மனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ள இவர் பற்றிய விபரம் வருமாறு.

36 வயது நிரம்பிய தமிமீழத்தைக் சேர்ந்த தமிழர் ஒருவருக்கு சுவீடன் அரசு அடைக்கலம் கொடுக்க மறுப்பு தெரிவித்தது. இவரது விண்ணப்பத்தை பரிசிலித்து விட்டு இவரைத் திருப்பி அனுப்ப முடிவு செய்தது. சுவீடன் குடிவரவுத் திணைக்களம் திருப்பி போக முடியாது என்றும் அவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டாள். தான் ஸ்ரீலங்க கூலிப்பட்டாளங்களால் வதை செய்யப்பட்டு இறக்க நேரிடும் என்னும் இவர் கூறினார். இருப்பினும் இவரது வேண்டுகோளை சுவீடன் குடிவரவு திணைக்கள அதிகாரிகள் செவி மடுக்கவில்லை. திருப்பி அனுப்புவது என்ற முடிவில் மாற்றமில்லை என்று தெரிவித்தவுடன் தன்னைத் தீயிட்டு கொழுத்தி மரணிப்பது என்று இவர் முடிவு செய்தார். அப்சல என்ற இடத்திற்கு அண்மையிலுள்ள தெருவொன்றில் நின்றவாறு பெற்றோலை தன் உடலில் ஊற்றிய இவர் தன்னைத் தானே தீமூட்டிக் கொண்டார். இது கண்ட பொதுமக்கள் இவரை உடனே ஆஸ்பத்திரியில் சேர்ப்பித்தார்கள். அவரின் நிலை கவலைக் கிடமாக உள்ளதாக சுவீடன் பத்திரிகையில் ஒன்றான யுஎன்ரி கூறுகிறது.

தீயிட்ட தமிழகதி மயக்க நிலையில் கொழும்பை பாதுகாப்பான இடம் என்கிறது ஸ்ரீலங்கா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வீட்டு வைத்தியம்

கலாநிதி பாலசிவகடாட்சம்

## செமியாக் குணம்

### வாய்வு வயிற்றுப் பொருமல் (Flatulence)

அளவுக்கு மீறி உண்ணுதல், இலகுவில் சமிபாடடையாத பண்டங்களை உண்ணுதல், போஞ்சி போன்ற அவரையினக் காய்கறிகளை அதிகமாக உண்ணுதல் போன்ற காரணங்களால் வாய்வு, வயிற்றுப் பொருமல் என்பன ஏற்படலாம். குறிப்பிட்ட சில மாச்சத்துக்களை (Carbohyrates) செமிபாட்டுத் தொகுதியானது உறிஞ்ச முடியாமல் இருப்பதே வாய்வு ஏற்படுவதற்குப் பிரதான காரணம் எனக் கூறப்படுகிறது. பத்தியம் வாய்வு ஏற்படுத்தக்கூடிய உணவுகளை, சொந்த அனுபவத்தின் மூலம் கண்டறிந்து அவற்றை உண்பதைக் குறைத்து விடவும். போஞ்சி முதலான காய்கறிகளை உண்போர் அவற்றை முதலில் தண்ணீரில் பன்னிரண்டு மணிநேரம் ஊறவைத்த பின்னர் நன்றாக வேகவைத்துச் சாப்பிடவும்.

### சிகிச்சை

ஒரு இஞ்சித்துண்டு (2கிராம் அளவில்) எடுத்து சிறிதளவு உப்புடன் சாப்பாட்டிற்கு ஐந்த நிமிடங்களுக்கு முன்னர் வாயிலிட்டுச் சுவைக்கவும்

**அல்லது**

இஞ்சிச் சாறு இரண்டு தேக்கரண்டியளவு எடுத்து சிறிது உப்பும் சேர்த்துக் குடிக்கவும்

**அல்லது**

இஞ்சிச் சாறு ஒருதேக்கரண்டியுடன் சம அளவு எலுமிச்சம் பழச் சாறும், சிறிதளவு உப்பும் சேர்த்துக் குடிக்கவும் (ஒரு நாளைக்கு இரண்டு தடவைகள் சாப்பாட்டிற்குப் பின்)

**அல்லது**

வேர்க்கொம்புத் தூள் ஒரு தேக்கரண்டி, மிளகுத் தூள் ஒரு தேக்கரண்டி இரண்டையும் இரு நூறு மில்லிலீட்டர் தண்ணீரில் இட்டு நாலில் ஒன்றாக வற்றும் வரை காய்ச்சி எடுக்கவும். இக்குடிநீரில் ஒன்றரை மேசைக் கரண்டி (45மில்லிலீட்டர்) ஒரு நாளைக்கு மூன்று தடவைகள் குடிக்கவும்.

**அல்லது**

வேர்க் கொம்பு, மிளகு சம நிறையாக எடுத்து வறுத்துத் தூளாக்கவும். இத்தூளில் ஒரு தேக்கரண்டி தண்ணீருடன் அருந்தவும். ஒரு நாளைக்கு இரண்டு தடவைகள்.

**அல்லது**

ஓமத்தூள் ஒருதேக்கரண்டி அளவு எடுத்து வெந்நீருடன் அருந்தவும். ஒருநாளைக்கு இரண்டு தடவைகள் சாப்பாட்டிற்குப் பின்.

**அல்லது**

வெந்தயம் ஒருதேக்கரண்டி வாயில் போட்டு தண்ணீர் குடிக்கவும். ஒரு நாளைக்கு இரண்டு தடவைகள்.

### குழந்தைகளுக்கு

குழந்தைகளுக்குச் செமியாக் குணம் இருந்தால் இஞ்சிச் சாறு பத்துத் துளி. தேன் பத்துத் துளி இரண்டையும் கலந்து கொடுக்கவும்.

## மலச்சிக்கல்

### (CONSTIPATION)

மூன்று நாளைக்கு ஒரு முறையேனும் மலம் கழியாமலும், மலம் இறுக்கமாகவும் இருப்பதை மலச் சிக்கல் என்று கூறுவர். மலச்சிக்கல் சிலரில் சடுதியாகத் தோன்றுவதாயும், வேறு சிலரில் தொடரும் பிரச்சினையாகவும் காணப்படுகிறது. குழந்தைகளில் தவறான உணவு முறையால் மலச்சிக்கல் தோன்றலாம். முதியோரும், கர்ப்பிணிகளும் இப்பிரச்சினையால் பொதுவாக அவதிப்படுவது உண்டு. வயிற்றோட்டத்தின் பின்பும், பேதிமருந்து குடித்த பின்பும் மலச்சிக்கல் தோன்ற இடமுண்டு. மலம் போகாமை, கஷ்டப்பட்டு மலம் கழிதல், அடிவயிற்றில் வலி, குத்து. பசியின்மை. தலையிடி என்பன மலச் சிக்கலுடன் சேர்ந்து தோன்றும் குறிகுணங்களாகும்.

### பத்தியம்

மலச்சிக்கலுடைய நோயாளிகள் நீர், மற்றும் பழச் சாறுகளை கூடுதலாக அருந்தவேண்டும். குறைந்தது ஆறு கிளாஸ் தண்ணீரை ஒவ்வொரு நாளும் குடிப்பது நல்லது. பழங்கள், காய்கறிகள். மற்றும் நார்ச்சத்து(FIBER)உடைய உணவுகளைப் போதியளவு சாப்பிட வேண்டும். எண்ணெய், எண்ணெய்ப் பதார்த்தங்களை முற்றிலும் தவிர்க்க வேண்டும்.

### சிகிச்சை

கடுக்காய்த் தூள் ஒரு தேக்கரண்டி அளவு ஒரு கோப்பை சூடான நீருடன் அல்லது பாலுடன் படுக்கைக்குப் போகும் முன்னர் அருந்தவும். கோடை காலத்தில் இதனுடன் சிறிது தேன் அல்லது சீனி சேர்க்கவும். குளிர் காலத்தில் வேர்க் கொம்பு (சுக்கு) அல்லது திரிப்பலி சேர்க்கவும். இச்சிகிச்சை கர்ப்பிணிகள் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்றதன்று.

மலச்சிக்கலுடன் வயிற்று வலியும் இருந்தால் ஒரு தேக்கரண்டி கடுக்காய்த்தூளுடன் ஒரு கிராம் இஞ்சி சேர்த்து சுடுநீருடன் அருந்தவும். அல்லது இரண்டு மேசைக்கரண்டி கடுக்காயக் குடிநீருடன் ஒரு கிராம் இஞ்சி சேர்த்துக் குடிக்கவும். இச் சிகிச்சை கர்ப்பிணிகள் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்றதன்று.

### குழந்தைகளுக்கு

குழந்தைகள் பசியாமலும், சதா வயிற்று வலியுடனும் அழுது கொண்டிருந்தால் வசம்பைச் சுட்டு அதில் சிறிதளவு வெந்நீரை விட்டு கரைத்துக் கொடுக்கவும்.

**அல்லது**

சுட்ட வசம்பை துளிதேனில் கலந்து, நாக்கில் தடவவும். வயதிற்கு தகுந்தபடி கொடுக்கவும்.

நீட்டிங்கில் நீங்கள் விரும்பிய பழைய புதிய திரைப்படங்களுக்கு
தரமான பிரதியில், குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள
பிரியா வீடியோ சென்ரர்
வெகு விரைவில் உங்களுக்காக இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட தரமான பிரதிகளுடன்
நீட்டிங் புறோட்வே சந்தியில் திறக்க உள்ளனர்... விபரங்களை எதிர் பாருங்கள்

1ம் பக்கத் தொடர்ச்சி.....

### தேர்தலில் குத்துக்கரணம்

ஈ.பி.டி.பி சிங்களப் பொலிசாரை சிவில் உடையில் குவித்து விட்டு அரைவாசி வாக்குகளை கொழும்பிலேயே போட்டனர் நியாயமான தேர்தலை நடத்தி முடித்திருக்கிறது ஸ்ரீலங்கா. இந்த லட்சனத்தில் 762,900 மொத்த வாக்காளர்களில் 50–75 விகிதமானோர் வாக்களித்துள்ளனர் என்று கும்மியடிக்கின்றன அரசின் அடிவருடி தினசரிகள்.

புலிகளின் மிரட்டல்களுக்கிடையிலும் பகிஸ்கரிக்கும் படி கோரிய பின்னரும் வாக்களிப்பு தடங்கல் இல்லாமல் நடந்திருக்கிறது. கிழக்கில் நடந்து முடிந்தது ஒரு நாடகமே என்றாலும் எந்த வித பாதிப்பும் இன்றி நடந்தது. புலிகளின் ஸ்திரத் தன்மையில் கேள்வியை எழுப்பிமிருக்கிறது.

'மக்கள்' புலிகளையிட்டு அலுத்து விட்டார்கள். இராணுவத்தையிட்டும் வெறுப்படைந்துக்களார்கள் அதனாலேயே சமாதானம் வேண்டும் என்று அவர்கள் வாக்களித் துள்ளார்கள் என்று கூறுகிறார் ஜெனரல் அவர்கள்.

## ரோந்து சென்ற இராணுவம் மீது புலிகள் தாக்குதல்

(மார்ச் 6)

அண்மையில் நடந்த மோதல் ஒன்றில் ஒன்பது புலிகளும் மூன்று இராணுவத்தினரும் இறந்துள்ளனர் என்று செய்திகள் கூறுகின்றன. வடக்கில் நடந்ததாக கூறப்படும் இத்தாக்குதல் எங்கு நடந்தது என்பதை செய்தி நிறுவனம் குறிப்பிடவில்லை. இராணுவ பேச்சாளர் ஒருவர் கூறுகையில் இராணுவம் ரோந்தில் ஈடுபட்ட சமயம் புலிகள் சுட்ட போதே மோதல் ஏற்பட்டது என்று குறிப்பிட்டார். இரு இராணுவத்தினர் காயப்பட்டனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

வவுனியாவுக்கு வரும் யாழ் பயணிகள் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்று யாழ் பத்திரிகையை மேற் கோள் காட்டிக் கூறியுள்ளனர்.

முதலாம் பக்கத் தொடர்சி...

### கனடாவின சமாதான....

முயற்சியை இலங்கை அரசு மறுத்து விட்டது.

யார் என்று குறிப்பிடப்பிடாத கனடிய எம்பிக்கள் அடங்கிய குழுவை பிரதிநிதித்துவம் செய்யும் பனிஸ்ரர் மக்ஸ் பேகர் மேற்படி முயற்சியை இலங்யை அரசின் மந்திரி தொண்டமானூடாக அரசுக்கு தெரிவித்தார்.

அரசின் கொள்கையால் வெளிநாட்டு தலையீட்டை தடை செய்வது என்பதில் அரசு கடுமையாக உள்ளது என்று ஒப்சேவர் பத் திரிகை கருத்து தெரிவித்துள்ளது.

1ம் பக்கத் தொடர்ச்சி கனடாவின்....

பிரேமதாஸ வின் நிலையை உலக வங்கி தெளிவாக புரிந்து கொண்டது. சர்வதேச நாணய நிதியமும் உலகவங்கியும் இணைந்து பிரேமதாஸ அரசை தோட்டங்களான தனியார் மயப்படுத்தும்படி வற்புறுத்தினார்.

500.000 தொழிலாளிகளை வேலைக் களத்தியுள்ள இந்த தோட்டங்கள் தானியார் மயம் விரைவில் ஆரம்பிக்கப்பட உண்டு அவ்வாறு தொடர்ந்து செய்வது தோட்டத் தொழிலாளர்களின் வேலைக்கும், சலுகைகளுக்கும் வைக்கும் வேட்டு என்று சில முன்னணி அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளன.

## ஐம்பது கோடிக்கும் மேலான இராணுவத்தினரின் ஆயுதங்கள் புலிகளிடம்.

இதுவரையில் நடைபெற்ற இராணுவ முகாம் மீதான தாக்குதல்களில் ஐம்பது கோடிக்கு மேல் பெறுமதியுள்ள ஆயுதங்களை புலிகள் கைப்பற்றியுள்ளனர் என்று இராணுவ விசேட உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். கட்டைக்காடு, ஜானகபுர, பூநகரி ஆகிய முகாம் தாக்குதல்களின் போதே இவ்வளவு பெறுமதியான ஆயுதங்கள் புலிகளால் கொண்டு செல்லப்பட்டுள்ளன என்றும் கூறப்பட்டுள்ளது.

www.tamilarangam.net



ஈழபூமி

13-03-94 - 26-03-94

ஆசிரியர் குழு

திரு. சு. செல்வநாயகம்
திரு. ச. மதியழகன்
திரு. ய. ராஜேந்திரன்
திரு. ம. அன்டன் யூட்
செல்வி. எம். கணேஸ்
திரு. ச. சஞ்ஜீவ்
திரு. சு. வில்வராஜ்

விளம்பரம் விற்பனை

திரு. வீ. ஜெனேதாஸ்

கட்டுரை, விளம்பரம், கவிதை மற்றும் ஆக்கங்கள், கருத்துக்களை அனுப்ப வேண்டிய முகவரி

P.O BOX
LONGMEAD ROAD
TOOTING
LONDON SW17
UNITED KINGDOM

அச்சுப்பதிப்பு

TRB PRINTING
EAST SUSSEX

# மீண்டும் ஈழபூமி

மீண்டும் ஈழபூமி....

ஆனால்
வித்தியாசமான நிர்வாகத்தின் கீழ்
செய்திகளான செய்திகளாகவும் அதே வேளை பொறுப்புணர்வோடும் ஒரு பத்திரிகை வர வேண்டுமென்று எண்ணினோம்.

இன்னொரு பெயரில் தொடங்குவது பற்றி சிந்தித்த போது தான் ஈழபூமி என்ற பத்திரிகை ஞாபகத்திற்கு வந்தது.

ஈழபூமி வெளிவந்த ஆக்கங்கள் யாவற்றுடனும் முழுமையாக உடன்பாடு இல்லாவிட்டால் கூட, அதில் வெளிவந்த கருத்துக்கள், துணிச்சலான போக்கு, எழிமை போன்ற பல அம்சங்கள் எமக்கு பிடித்திருந்தன. இவையே ஈழபூமி என்ற பெயரில் வெளியிட முனைகிறோம். ஈழபூமி என்ற பெயரை பாவிக்க அனுமதி தந்த ஈழபூமியின் உறுப்பினர்களுக்கு நன்றி.

ஈழபூமி அணைத்து வாசகர்களின் தேவைகளையும் பூர்த்தி செய்வது தொடர்பாக ஆவன செய்வோம்.

எந்த ஒரு அரசியல் கட்சியினுடனோ, அமைப்புக்களுடனோ, அன்றி, இன, மதஈ சமுக சார்புக் குழுக்களுடனாக தொடர்பில்லாத நாம், தமிழீழம் என்ற இலட்சியத்திற்கு ஆதரவானவர்கள்.
சிதைந்து கிடக்கும் எம்மவர்களின் சிந்தனையைத் தட்டி எழுப்ப குரல் கொடுக்கும் இப்பத்திரிகை தமிழீழத்தை முற்று முழுதாக ஆதரிக்கும்.

வாசகர்களே! இருவாரத்திற்கு ஒரு முறை டீண்டும் உங்கள் கரங்களில் ஈழபூமி வருவதை நாம் உறுதி செய்வோம் நீங்களும். உங்கள் ஆதரவை தருவீர்கள் என்ற நம்பிக்கையுடன்.

# நடந்து முடிந்த இன்னொரு நாடகம்.

வடதமிழீழத்தையும் தென் தமிழீழத்தையும் இரண்டாகப் பிரித்து நம் ஸ்ரீலங்கா அரசு எத்தனையோ நாடகங்களை மேடையேற்றி இருக்கிறது. ஆனால் இம்முறை நகராட்சி தேர்தல் என்ற நாடகம் மேடையேறியது வித்தியாசமானது.

தமிழிக் குழுக்கள் போட்டிபோடக் காரணங்களைக் கூறினர். போட்டி போடாமைக்கு காரணங்களைக் கூறின ஈ.பி.ஆர்.எல்.எவ் போட்டி போடவில்லை என்று ஏதோ எல்லாம் அறிக்கை விட்டு விட்டு கொழும்பில் கொறட்டை விட்டது. புளட்டும் ரெலோவும் அடிபிடி இல்லை என்று கூறிக் கொண்டே அடிபட்டன.

வவுனியாவிலும் தென்தமிழீழத்திலும் அகதிகளாக அடித்து விரட்டிவிட்டு பட்டினி போட்டு ஒட்டி விரட்டிவிட்டு எஞ்சி இருப்பவர்களை துப்பாக்கி முனையில் வாக்கு போட வைத்து நாடகத்தின் பின்னணி பிஞ்சுக் குழந்தைக்கும் புரியும்.

ஆனால் தமிழீழத்தை பிச்சு வித்த புளட்டுக்கும் ரெலோவுக்கும் புரியவில்லை. ஈ.பிடி.பி தமிழீமம் என்றெல்லாம் கதைக்கிறது. கொழும்பில் ஏதேனும் மூளைக் காக்கள் பரவுகிறதோ தெரியவில்லை.

ஆயுதம் வாங்கவும் கடன் பெற்றுக் கொள்ளவும் திடம் சொன்ன ஸ்ரீலங்கா அரசுக்கு இவர்கள் பாடம் புகட்டப் போகின்றார்களாம். சிங்கள் இராணுவ முகாம்களின் நெருப்பிலே குளிர் காயும் எங்களின் புளட் புதல்வர்கள் அறிக்கை விட்டிருக்கிறார்கள் தேசிய கட்சியிடம் சரணடையக் கூடாதாம்.
ஜனதிபதிக்கு குறிசுடப் போகிறார்கள் ரெலோவினர்.
என்ன செய்வது?
எல்லோருமாகச் சேர்ந்து ஒரு முறை................


# ஈழபூமி வெற்றிக்கிண்ண விளையாட்டு போட்டிகள்

ஈழபூமி பத்திரிகை ஆரம்பித்து இத்தோடு மூன்று ஆண்டுகள் நிறைவு பெற்று விட்டது. எத்தனையே இன்னல்கள், தடைகள் மத்தியில் பத்திரிகையை நடாத்த வேண்டிய கட்டத்திலும் புலம் பெயர்ந்தவர்கள் மத்தியில் குறிப்பாக இளைஞர் சமுதாயத்தில் ஏற்படும் விரக்திகளை போக்கும் ஓரே எண்ணத்துடன் 1992ம் ஆண்டு ஈழபூமி கிரிக்கட் வெற்றிக் கிண்ண போட்டிகளையும் கடந்த ஆண்டும் அதே போன்ற போட்டிகளையும் நடாத்தியது. புதிய நிர்வாகத்தின் கீழ் இதனை இன்னும் மெருகூட்டும் விதத்தில் இந்த ஆண்டு முன்னைப் போல் இல்லாது பல தரப்பட்ட போட்டிகளையும் நாம் நடாத்த உள்ளோம். விளையாட்டுத் துறையில் ஆர்வமுள்ள சகலருக்கும் சந்தர்ப்பம் அளிக்கும் நோக்கத்துடன்

| 16–07–94இல் | 03–07–94இல் | 14–07–94இல் |
|---|---|---|
| துடுப்பாட்டம் Cricket | உதை பந்தாட்டம் Football | சதுரங்கம் Chess |

ஆகிய வெற்றிக்கிண்ணப் போட்டிகளுடன்
*Netball, Badminton*
போட்டிகளும் நடைபெற உள்ளது. இது பற்றிய மேலதிக விபரங்களுக்கும் விண்ணப்பங்களுக்கம் ஈழபூமியுடன் கடிதம் மூலம் தொடர்புகொள்ளவும்
(தொலைபேசி 0956 272136 – ராஜ்)
பி.கு. சதுரங்கத்தில் வெற்றிபெறும் வீரருக்கு ஈழபூமி கிண்ணத்துடன் பிரான்ஸ் நாட்டுக்குச் சென்றுதிரும்ப இலவச பயண சீட்டு பரிசாக வழங்கப்படும்.

# கலை இரவு

ஈழபூமி வெற்றிக்கிண்ண விளையாட்டுச் சுற்றுப் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு விழாவில் தமிழ் கலைஞர்களை ஊக்குவிக்குமுகமாக பின்வரும் கலை நிகழ்சிகள் இடம்பெற உள்ளன

நடனப் போட்டி
தனிநபர் நடிப்பு
பாட்டுக்குப்பாட்டு
கவிதா நிகழ்வு
நாடகம்

இன்னும் சுவையான பல அமசங்கள்
காலம்
30–07–1994 சனிக்கிழமை

போட்டிகளில் பங்குபற்ற விரும்புபவர்கள் ஈழபூமியுடன் கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## குறளுக்கு சில புதிய விளக்கங்கள்

# திருக்குறளும் தெளிவுரையில் சிறு திருத்தங்களும்

திருவள்ளுவர் பெருந்தகை நமக்கருளி வைத்த திருக்குறள் ஒரு பொய்யா மொழித் தத்துவம் என்பது உலகறிந்ததே! வள்ளுவர் தந்த குறளுக்குப் பல அறிஞர்கள் தந்துள்ள விளக்கங்களை நாம் படித்திருக்கின்றோம். அவ்விளக்கங்கள் பலவற்றில், வள்ளுவரின் கருத்துக்கள் தெட்டத் தெளிவாக உள்ளன. ஆனால், ஏனோ ஒரு சில விளக்கங்களைப் படிக்கும் போது எனக்கு அதில் திருப்தி ஏற்படவில்லை. உதாரணமாக இங்கே ஒரு குறளை எடுத்துக் கொள்வோம்.

துறவறவியலில் 'கூடா ஒழுக்கத்' தின் கீழ் வருவதும்.

**"மழித்தலும் நீட்டலும் வேண்டா**
**உலகம் பழித்தது ஒழித்து விடின்"**

– குறள் 280.

இதற்கு ஏற்கனவே அறிஞர்கள் கொடுத்துள்ள விளக்கமானது, உலகம் பழிக்கும் தீயொழுக்கத்தை விட்டுவிட்டால், (தலை முடியை) மொட்டை அடித்தலும், சடை வளர்த்தலுமாகிய புறக் கோலங்களும் வேண்டாம் என் பதாகும்.

ஆனால், இதோ குறளுக்கு நான் கொடுக்கும் விளக்கமானது,

**மழித்தலும் – ஓர் உண்மையை மழுங்கடித்தலும், நீட்டலும் – ஓர் சாதாரண விடயத்தைப் பெரிதாக்கி நீட்டி விரித்தலும், வேண்டா – செய்ய வேண்டாம், உலகம் – உலகத்தோர், பழித்தது – பழித்து ஒதுக்கியதை, ஒழித்து விடின் – விட்டு விட்டால் நன்று.**

அதாவது,

ஓர் உண்மையைக் குறுக்கி மழுங்கடித்தலும், ஓர் சாதாரண விடயத்தைப் பெரிதாக்கி கண் மூக்கு வாய் வைத்துச் சொல்லுதலும் போன்ற உலகத்தார் பழித்து ஒதுக்கும் படியான செய்கையைக் கைவிட்டு விடுதல் நன்று. என்பதாகும்.

காரணம் :- ஒரு நாடு, ஒரு சமூகம் – அதன் வாழ்க்கை முறை எப்படி ஒழுக்கமாகவும், பண்பாடு, நீதி, மனிதாபிமானம் வழுவாமலும் வாழ வேண்டும் என்பதையும் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என கைவிட்டு மிகவும் தெளிவாகவும் நயம்படவும் விளக்கியதோடல்லாம், தேசத்தின் ஆட்சி முறை எப்படி அமைய வேண்டும். மன்னன், அமைச்சர், குடிமக்கள் ஆகியோரின் கடமைகள் எவை என்பவற்றையும் கூட உதாரணங் காட்டித் 'திருக்குறளில்' விளக் கியுள்ள வள்ளுவர் பெருமான். அவ்விடயத்துக்குச் சம்பந்த மில்லாத (தலை) முடியை உதாரணமாகக் கொண்டமைத் திருக்கமாட்டார் என்பதே எனது கருத்து.

மேலும் இக்குறளுக்கு உதாரணக் கதையொன்றும் சொல்கின்றேன்.

ஓர் ஊரில் மணி என்றொரு வியாபாரி இருந்தான். அவன் எந்நாளும், தெருவோரத்தில் குந்திமிருந்து சில நிறக்கற்கள் அதாவது பச்சை, நீலம், சிவப்பு, மஞ்சளென நிறம் கொண்ட கற்களை வழிப்போக்கர்களுக்குக் கூவி விற்பதே அவன் வியாபாரம்.

விற்கும் போது 'ஐயா, அம்மா, எல்லோரும் வாங்க! இதோ ராசிக் கற்களைப் பாருங்கள்! உங்கள் ராசி என்ன என்றே, உங்கள் பிறந்த திகதி என்ன என்றே சொல்லுங்க! நான் உங்களுக்குப் பொருத்தமான – ராசியான கல்லைத் தருகின்றேன். மூன்று வாரம் உங்கள் சட்டைப்பையிலோ, கைப் பையிலோ கொண்டு செல்லுங்கள். நீங்கள் போகிற காரியம் வெற்றியளிக்கின்றதா, இல்லையா பாருங்கள். உங்களுக்குப் பலனளிக்காவிட்டால் இதோ இந்த இடத்திலேயே நான் இருப்பேன் என்னிடம் கல்லைக் கொண்டு வந்து தாருங்கள் நான் உங்கள் பணத்தை இரண்டு மடங்காகத் திருப்பித் தருவேன்! ஒரு கல் பன்னிரெண்டு ரூபாய் மட்டுமே! ஒடிவாங்க! தேடி வருகிற அதிர்ஷ்டத்தைக் காலால் தள்ளாதீங்கள்! அம்மா வாங்க! ஐயா வாங்க! எல்லோரும் வாங்க!' என்றே கூவிக் கூவி விற்பான்.

அவ்வழியே வந்து கொண்டிருந்த சுந்தரத்தின் காதுகளில் இவ் வோசை விழுந்தது. சுந்தரமோ ஒரு மாட்டு வண்டியை வைத்து அன்றடம் உடல் வருந்தி உழைத்து வாழ்க்கையை ஓட்டுபவன். எவ்வளவு கஷ்டப்பட்டு முன்னேற்றமில்லாத தன் வாழ்க்கை மேல் அவனுக்கு விரக்தியே எஞ்சியிருந்தது. அன்று தனக்கு கூலியாகக் கிடைத்த பதினைந்து ரூபாயில தன் குடும்பத்துக்கு அரிசி, பருப்பு வாங்கிக் போகலாமென்று கடைத் தெருவிற்குச் சென்றவனுக்கு – மணியின் இவ்வாசகங்கள் தேனாக ஒலித்தன. தினமும் சமைக் கின்றோம், சாப்பிடுகின்றோம் என்ன தான் மீதி? இன்று பட்டினி கிடந்தாலும், இக்கல்லை வாங்கினால் மூன்று வாரத்தில் என் கஷ்டமெல்லாம் நீங்குமாமே! அதை வாங்கத்தான் வேண்டும் – என்று நினைத்த தோடல்லாம், பணத்தைக் கொடுத்துக் கல்லையும் பெற்றுக் கொண்டான் சுந்தரம்.

அதுசரி, இக்கல் பயனளிக்காமல் போனால் மூன்று வாரங் கழித்து மணியிடம் கல்லைக் கொடுத்து, இரண்டு மடங்கு பணம் பெற அவ்விடத்திற்கு வந்தால், இங்கு மணி இருக்கவா போகின்றான்? இல்லாவே இல்லை. அவன் வேறோரு இடத்தில் இதே வாய் ஜாலம் போட்டு மக்களை ஏமாற்றித் தன் கற்களை விற்றுக் கொண்டிருப்பான். மேலும், குவியல் குவியலாக விற்றுக் கொண்டிருக்கும் கற்களில் ஒன்று அவனது ராசிக்கு நிச்சயமாகப் பொருந்தத்தானே வேண்டும்? அப்படி பொருந்தியிருந்தால், இவ்வேளை அவனது கஷ்டங்கள் நீங்கி அதிர்ஷ்டம் அவனை நாடியிருக்க வேண்டுமே? அப்படியானால், மணி வெயிலிலும், மழையிலும் நின்று இக்கற்களைக் கூவிக் கூவி விற்றுக் கஷ்டப்பட வேண்டியதில்லையே! இதனை யெல்லா்ம் சுந்தரம் நினைத்தானா? சுந்தரம் மட்டுமல்ல மணியிடம் கற்களை வாங்கும் எவருமே நினைப்பதில்லை.

இங்கே இக்கதையில் நடந்ததைப் பார்ப்போம், மணி தன்னிடமுள்ள நிறக்கற்களை விற்பதற்காக, அதில் அதிர்ஷ்டம் அளிக்கும் சக்தி இருப்பதாக அக்கற்களின் சக்தியை மிகைப்படுத்தி (exaggrtate பண்ணி) கூறு கின்றான். அது ஏமாற்று வேலை – இதைத்தான் வள்ளுவர் 'நீட்டல்' எனக் குறிப்பிட்டு அச்செய்கை 'வேண்டா' எனக் கூறியுள்ளார்.

அடுத்த உதாரணக் கதையையும் சொல்லுகின்றேன்.

வைரக்கல் வியாபாரி மூர்த்தி தன் மகன் பாலனுக்கு தன்னைப் போல் வியாபாரத்தில் ஈடுபாடு வராதது கண்டு மனமுடைந்து போனான். வயதாகிவிட்ட லட்சாதிபதி மூர்த்திக்கு ஒரே வாரிசு அவன் மகன் பாலன்தான். பாலனுக்கோ வைரக்கற்களைத் தரம்பிரிக்கவோ, அவற்றை விலை மதிக்கவோ தெரியவில்லை. ஒரு நாள் மூர்த்தி பாலனை அழைத்து, ஒரு பெட்டியைக் கொடுத்து, 'அதை வைத்துப் பிழைத்துக் கொள்' என்று கூறி முடிக்கும் முன் இறந்து போனான். பெட்டியைத் திறந்து பார்த்த பாலனுக்குக் குழப்பம் இன்னும் அதிகமானது. மூர்த்தி கொடுத்த பெட்டிக்குள் இருபது மட்டில் விலையுயர்ந்த வைரக்கற்கள் இருந்தன.

சிறிது நாளில் சிறுவன் பாலனோ, முன்பு தன் தந்தையிடம் வேலை பார்த்த நஞ்சப்பனிடம் சென்று 'அண்ணா, இதற்குள் இருப்பவை வைரக்கற்கள்தான் என்று நினைக்கின்றேன், இவற்றை அப்பா இறக்கும் போது என்னிடம் கொடுத்தார். எனக்கு இதைப்பற்றிய அறிவு கிடையாது. இதற்கு ஒரு விலையை மதித்து எடுத்துக் கொண்டு, எனக்குப் பணம் கொடுங்கள், நான் என் படிப்பையே தொடர விரும்பு கின்றேன்' என்றான்.

ஆனால், நஞ்சப்பனோ சிறிது யோசித்து விட்டுப் பாலனிட மிருந்து பெட்டியை வாங்கினான். பெட்டியைத் திறந்து கற்களை எடுத்துப் பார்த்தவன், 'சீ.... இவையெல்லாம் வைரக்கற்களா? வெறும் ஆபாலி வைரங்கள். இவற்றை வெளியில் கொண்டு திரிந்தாலே அரச தண்டனைதான் கிடைக்கும்.' என்று சொல்லிப் பெட்டியோடு தன் கடையின் மூலையொன்றில் விட்டைறிந்தான். அத்தோடு நில்லாமல், 'அடா பாவி மனிதா ஊரைத்தான் ஏமாற்றிப் போலிக்கற்களை விற்றாயென்றால் சாகும் போது கூட சொந்த மகனையும் ஏமாற்றிப் போய் விட்டாயே, எந்த நரகத்துக்குப் போனாயோ?' என்று மூர்த்தியைத் திட்டிகின்றன். இதை வைத்துக் கொண்டு படிக்க முடியுமா பார்! பழகிய தோஷத்துக்கு இதைத் தான் என்னால் செய்ய முடியும்.' என்று ஆயிரம் ரூபாவை மட்டும் கொடுத்தனுப்பினான் நஞ்சப்பன். பாலன் போன பின் ஒடிச்சென்று, பல லட்சங்கள் பெறுமதியான அவ்வைரக்கற்களை நஞ்சப்பன் எடுத்து பத்தரமாக வைத்துக் கொண்டான். மதிப்பீட்டைக் குறைத்துப் பாலனை ஏமாற்றி விட்ட சந்தோஷம் நஞ்சப்பனுக்கு.

இங்கே இக்கதையில் மதப்பீட்டைக் குறைப்பது என்பது ஏமாற்று வேலை. இந்தக் குறைவுபடுத்தலையே (disparage) வள்ளுவர் 'மழித்தல்' எனக் குறிப்பிட்டு, இச்செய்கையும் 'வேண்டா' என வலியுறுத்தியுள்ளார்.

இம் மழித்தலும், நீட்டலுமான ஏமாற்று வேலைகள் மக்களைப் பாதிக்குமாகையால் – உலகம் பழிக்கும் அச்செயலை ஒழித்து ஒதுக்குமாறு மேற்படி குறளில் வள்ளுவர் பெ[illegible] கூறுகின்றார். என்பதே என் [illegible]த்து.

திரிந்தாலே அரச தண்டனைதான்

ந. கேதீச்சரன்.

## இருத்தல்

வாலாட்டி வாலாட்டி
நீருள் இரத்தினங்களாக வெயில் சிதைய
மகிழ்ந்திருக்கும் சிறுமீன்கள்.
காற்றில் முளைத்து
தாழை மடலில் தரையிறங்கும் மீன்கொத்தி
மீண்டும் அமர்ந்தேன்.

தென்னங்கீற்றுத் தோகைக்குள்
இசைந்த சிறுகுருவி சிறகை விரித்தாச்சு.
இனி வானத்துச் சிப்பி வயிற்றுள்
மிளிருகின்ற சூரியனும் செரித்து விடும்.
நீர்க்கரையில் பாம்புகள் கண்விழிக்கும்.

கைபற்றிக் கதைத்திடவும்
மறையும் வரை பின்பக்கம் பார்த்திடவும் தூண்டுகின்ற
முலையரும்பும் பறட்டைத் தலைத் தேவதைகள்
தம்மனசில் வண்ணக் கனவுகளாய்க் குமிழி விடும்
ரீங்காரம் எல்லாம் காற்றில் உமிழ்ந்தபடி
ஆடுகளின் பின்னாடி போய் விட்டார்.

வணங்காமுடிப் பனைகளின் பின்
தூரத்தே
இடிமுழங்கிப் பறக்கும் அசுரர்களின்
சிறகோசை கேட்கிறது.
விரைந்தபடி "அண்ணே கவனம்" என்ற
துப்பாக்கிச் சிறுவர் சிலரும் மறைந்தவிட்டார்.

இன்னும் நுனி நாவில்
அனுதாப வார்த்தைகளைக் கோர்த்தபடி
இருளில் இருக்கின்றேன்.

வ.ஐ.ச.ஜெயபாலன்



www.tamilarangam.net

www.tamilarangam.net



# சட்டமும் மருத்துவமும்

**சட்டப்படி மருத்துவர்கள் நோயாளிகளை அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தும் போது அவருக்கு எந்த வகையான தகவல்களை அந்த நோய் சம்பந்தமாக கூற கடமைப்பட்டுள்ளார்கள் என்பதுவே இக்கட்டுரையின் நோக்கம்!**

சட்டமும், மருத்துவமும் எமது நடைமுறை வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்திருக்கும் இரு முக்கியமான அம்சங்கள். சமீப காலத்தில், பல வழக்குகள் வைத்திய சமுதாயத்தினர் மீது தொடுக்கப்பட்டிருக்கின்றன. இதன் முக்கிய காரணம், மக்கள் தங்கள் உடலில் ஒரு மருத்துவர் சிகிச்சையை மேற்கொள்ளும் போது அவர்களின் பூரண சம்மதத்தை முடிந்தவரையில் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயத்தையும், அப்படி சம்பந்தப்பட்ட நோயாளியின் விருப்பத்தை பெறாத சந்தர்ப்பத்தில், சம்பந்தப்பட்ட வைத்தியரின் மேல் அல்லது அமைப்பின் மேல் சட்டப்படியான நடவடிக்கை அல்லது வழக்குத் தொடரலாம் என்ற தமது உரிமைகளை அறிந்திருப்பதே காரணமாகும். சட்டப்படி மருத்துவர்கள் நோயாளிகளை அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தும் போது அவருக்கு எந்த வகையான தகவல்களை அந்த நோய் சம்பந்தமாக கூறக் கடமைப்பட்டுள்ளார்கள் என்பதுவே இந்தக் கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

நோயாளிகளுக்கு, இருக்கும் உரிமை பற்றிய இந்தப் பொதுக் கொள்கையானது (Concept) ஒரு நிறப்பு வாய்ந்த மருத்துவத் தத்துவமாகும். இதனை ஆங்கிலத்தில் "Informed Consent" என்று கூறுவார்கள். இதன் வளர்ச்சியானது மிகவும் தாமதமாகவும் உருவானாலும், ஆங்கிலச்சட்டமன்றங்களில் இது பற்றிய விவாதம் முதன் முதலில் 1981 இலேயே ஆரம்பமானது என்றால் பொருத்தமாயிருக்கும். அமெரிக்க சட்டவியலைப் பொறுத்தவரை இக் கொள்கையானது 1957ம் ஆண்டிலே "சல்கோ" (Salgo) என்ற மிகப் பிரசித்தி பெற்ற வழக்கிலேயே ஆராயப்பட்டது. ஆங்கில நீதிமன்றங்கள் இதுபற்றி விவாதித்து வந்த முடிவானது, ஒரு நோயாளிக்கு அவர் நோய் பற்றிய அல்லது மேற் கொள்ளப் போகும் சிகிச்சை பற்றிய விஷயங்களை மருத்துவர் தெரியப்படுத்தும் போது அந்த மருத்துவர் சில விஷயங்களைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியம். 'எந்த விஷயங்கள் ஒரு சராசரி புத்திக் கூர்மையை உடைய நோயாளியின் நியாயமான விருப்பத்தை அந்தக் குறிப்பிட்ட சிகிச்சை முறைக்கும் பெறப்பயன்படுமோ, அந்தளவு விஷயங்களை அம்மருத்துவர் நோயாளிக்குத் தெரியப்படுத்தினால் போதுமானது என்பதே அது. இம்முறையில் பெறப்படும் சம்மதமானது, முற்றிலும் சம்பந்தப்பட்ட வைத்தியரின் தீர்மானத்திற்குரியது என்று பின்னர் ஒரு காலகட்டத்தில் திருத்தியமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

பின்னர் ஒரு காலகட்டத்தில் அரசு நிதியுதவியில் மனிதரின் மேற் கொள்ளப்படும் விஞ்ஞான ஆராச்சிகளில் இந்த பொதுக் கொள்கையானது கடைப் பிடிக்கப்படவில்லை என்ற பலமான குற்றச்சாட்டுகள் எழுந்தன. அதாவது, சில விபரீதமான ஆபத்தை விளைவிக்கும் ஆராய்ச்சிகள் மேற் கொள்ளப்பட்ட போது ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்ட மனித உயிர்களிடம் அவர்கள் உட்படப்போகும் ஆராய்ச்சி பற்றி விளக்கிக் கூறி அவர்கள் பூரண சம்மந்தம் பெறப்படவில்லை என்பது வெளியானது. இதன் காரணம் இந்த விஞ்ஞான ஆராய்ச்சிகளைப் பொறுத்த வரை இவை நடந்து முடிந்து போன விஷயங்களைப் பாதிக்கும் விஷயங்கள் என்பதால், இவை ஒரு நோயாளியின் ஒவ்வொரு நாளைய நிர்வாகத்திற்கு உட்பட்டது. எனவே இதன் முடிவை நிர்ணயிக்கும் பொறுப்பு நீதிமன்றங்களையே சார்ந்தது.

நோயாளிகளின் உரிமைகளைப் பொறுத்த வரை மாசிமாதம் 1985 ஆண்டு என்பது ஒரு மிகவும் துக்கமான தினம் ஏனெனில் ஆங்கில உயர்நீதிமன்றமான House of Lords நோயாளிகளின் விருப்பத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் இந்த Informed consent என்ற பொதுக் கொள்கையை நிராகரித்து அந்த வகையில் நோயாளியின் ஒரே உரிமையானது அந்த சிகிச்சையால் ஏற்படக்கூடிய விளைவுகளைப் பற்றி அறிந்து கொள்ளுவதும், அவர் உட்படப் போகும் சிகிச்சை என்ன என்பதுவுமே ஆகும். அதுவும் சம்பந்தப்பட்ட மருத்துவர் விரும்பினாலேயே அந்நோயாளி இவ்விபரங்களை அறிந்து கொள்ளலாம். என்பதே House of Lords இன் தீர்ப்பாகும் *(Sldaway v Bethlam Royal Hospital 1985)* இந்த சிகிச்சைக்குரிய முடிவானது கனடா மற்றும் அமெரிக்க சட்டத்திற்குப் புறம்பானது என்பது குறிப்பிடத் தக்கது. அண்மையில அவுஸ்திரேலிய உயர் நீதிமன்றம் இம் முடிவை நிராகரித்து இதற்கு எதிராக தீர்ப்பளித்தது. *(Rogers V Whittaker 1993)*

இதுவகைகாலமும் சிகிச்சையின் போது மருத்துவர்கள் ஜாக்கிரதையாக செயற்பட்டால் இதனை நிருபிப்பதற்கு பாதிக்கப்பட்ட நோயாளி, குறிப்பிட்ட நேரத்தில், பொறுப்பான மருத்துவத் தீர்மானம் எடுக்கப்பட வில்லை அல்லது ஒருமுகமாள தீர்மானம் எடுக்கப்படாவிடினும் அதிகபட்ச தீர்மானம் கூட எடுக்கப்படவில்லை என்பதுடன் அப்படித்தீர்மானிக்கப்பட்டிருப்பின் சம்பந்தப்பட்ட மருத்துவரின் நடவடிக்கை ஆட்சேபனைக்கு உட்பட நேர்ந்திருக்காது என நிருபிக்க வேண்டும்.

Sldaway என்ற முன்பு குறிப்பிட்ட வழக்கிற்கு முன்னர் எந்த நன்மதிப்பைப்பெற்ற, தொழிலை மதிக்கும் மருத்துவராவது, நோயாளிக்குக் குறிப்பிட்ட சிகிச்சை சம்பந்தமாக எந்த விதமான விஷயங்களையாவது வெளியிடாமல் இருப்பதாலேயோ, அல்லது அச்சிகிச்சையால் ஏற்படக்கூடிய பாரதுரமானது விளைவுகளை வெளியிடத் தவறியமையாலேயோ (non-disclosure) எந்த ஒரு நீதிமன்றமும் அச்செய்கையை கடமை தவறியமை என்று முடிவு செய்யாது என்ற நிலைமையே இருந்து வந்தது.

இந்தக் கோட்பாடான தெரிவிக்கப்பட்டு பெறப்பட்ட சம்மதம் அல்லது விருப்பம் (Informrd consent) என்பதை நீர்ணயிக்கும் பொறுப்பானது நீதிமன்றங்களின் கைகளிலேயே இருக்கிறது என்கிறது இங்கிலாந்துச் சட்டம். அதாவது எந்த விஷயங்களை ஒரு நோயாளி அறிந்து கொள்ளலாம் அல்லது அறியக்கூடாது என்பதோ, எந்த விஷயங்களை ஒரு நோயாளிக்கு வெளியிடலாம் அல்லது வெளியிடக்கூடாது என்ற இறுதித் தீர்மானமானது வழக்கு மன்றங்களை தர்மசாஸ்திரக் கண்ணோட்டத்தின்படி (Ethical point of view) இந்தக் கோட்பாடானது சம்பந்தப்பட்ட நோயாளியின் சொந்த விருப்பு வெறுப்பைப் பொறுத்தது. எங்கே ஒரு மனிதனின் சம்மதம் முழுமையாகக் பெறப் படவில்லையோ அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் அம்மனிதனை ஆபத்திற்கோ, பாதிப்பிற்கோ உட்படுத்துவது மிகவும் தவறாகும். அத்துடன் மிகமுக்கியமாக அந்த நோயாளிக்கு அச்சிகிச்சையால் ஏற்படப்போகும் விளைவுகள் தெரிந்திருக்க வேண்டும். எதுவும் சொல்லப்படாத பட்சத்தில் அந்நோயாளிக்குத் தான் எந்த விதமான உரிமைகளுக்கு உரியவர் என்று தெரிந்திருக்க நியாயமில்லை.

பொதுவாக இந்த மாதிரியான சந்தர்ப்பத்தில் இரண்டு வகையான பிரமாணங்கள் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. அதாவது "நோயாளியின் பிரமாணம்" (Patients standard) 'வைத்தியரின் பிரமாணம் (Professional standard) ஒரு நோயாளியின் பிரமாணமானது, தனது உடலில் ஒரு வைத்திய நிபுணரால் ஏற்படுத்தப்படப்போகும் தாக்குதலுக்கு (battery) உடன் படத் தெரிவிக்கும் விருப்பமாகும். இம்முறையின் படி எந்த மருத்துவருக்கும் எந்த விதமான விஷயங்களை வெளியிடலாம் அல்லது வெளியிடக்கூடாது என்று நிர்ணயிக்க உரிமையில்லை. நியாயமாக இது சம்பந்தமாக, மருத்துவ மதிப்பீட்டின்படி எது முக்கியம், அல்லது முக்கியமில்லை என்பதைத் தவிர்த்து சம்பந்தப்பட்ட நோயாளிக்கு முழுமையான தகவல்களை முடிந்தவரை அளித்து, அதன் மூலம் அவரது மனப்பூர்வமான விருப்பத்தை மருத்துவர்கள் பெறுவதே மிகச் சிறந்தது.

இந்த முறை என்னவோ, நோயாளிக்கு அந்தச்சிகிச்சை பற்றி முடிவெடுக்கும் முழு சுதந்திரத்தையும் அளித்தாலும் இம்முறை மூலம், ஒரு மருத்துவர் நிபுணருக்கு இருக்கும் வைத்திய சாஸ்த்திரப்படி முடிவெடுக்கும் உரிமையைக் குறைக்கிறது. இதன் காரணமாகவே, வைத்தியத் தொழிலை நேசிக்கும், நோயாளினனின் சுதந்திரத்திற்கு (Patient autonomy) மதிப்பளிப்போர் கூட மருத்துவர்களின் வியாதியைக் குணப்படுத்தும் வைத்திய சாஸ்திர தனிச் சுதந்திரத்திற்கு (Therapeutic privilege) மதிப்பளித்து, அவர்கள், எந்த விதமான செய்திகளையோ, விஷயங்களையோ நோயாளிக்கு எட்ட விடாமல் பார்த்துக் கொள்ளலாம் என்கின்றனர். இதன் மூலமாக அக்குறிப்பிட்ட நோயாளிக்கு ஏற்படக்கூடிய குழப்பங்களையும், துயரத்தையும் தவிர்க்கலாமெனில் வைத்தியர்கள் தமது முழு சுதந்திரத்தையும் பயன்படுத்தலாம் என்பதே அவர்கள் கருத்து. தொடரும்........

**நீதி தேவதை**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## மனித இயந்திரத்தால் அழிந்து போகும் இயற்கை

# வற்றும் கடல்

உலகிலே மிகப் பெரிய தரையால் சூழப்பட்ட கடல்களில் ஒன்றான ஏரல் (Aral sea) கடல் கடந்த 30 வருடங்களில் தனது மூன்றில் ஒரு பங்கு நீரினை இழந்து வற்றிக்கொண்டு போகின்றது. மத்திய ஆசியாவில் உள்ள இக்கடலுக்கு சிர் டார்யா (Syr-Darya) அமுர் டார்யா (Amdarya) ஆகிய நதிகளின் மூலமே தேவையான நீர் வந்தடைகின்றது. முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் மத்தியாசியக் குடியரசுகளான காசக்ஸ்தான், உப்பெக்கிஸ்தான், தாஜிக்கிஸ்தான் போன்றவற்றில் பருத்திப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள இவ்விரு நதிகளையும் திசை திருப்பி நதி நீரானது ஒருமுக நீர்பாசனத் திட்டங்களின் மூலம் பருத்தி பயிற் செய்கைக்குப் பயன்பட்டது. இதனால் ஏரல் கடலுக்கு நதிகளால் வந்து சேரும் நீரின் அளவு வெகுவாகக் குறைந்தது அல்லது வராமல் விட்டது என்றே கூறலாம். கடலிருந்து ஆவியாகி வெளியேறும் நீரினளவு ஆனாது மாறாது தொடர்ந்து ஒரேயளவு நீர் ஆவியாவதன் மூலம் ஏரல் கடலிருந்து வெளியேறிக் கொண்டிருக்கின்றது. ஏரல் கடலுக்கு நீர் ஒன்றும் வந்து சேராமலும் அதே நேரம் ஆவியாவதன் மூலம் கடல் நீர் தொடர்ந்து வெளியேறிக் கொண்டிருப்பதால் ஏரல் கடலானது வற்றிக்கொண்டே போகின்றது. முன்னொரு காலத்தில் துறைமுகங்களாக இருந்த பகுதிகளெல்லாம் இப்போ தரையாகவுள்ளது. கடல் வற்றிய இடங்களில் கடற் தாவரங்கள் எல்லாம் இறந்து அழிந்து அவ்நிலப்பரப்புகளெல்லாம் பாலை நிலமாக மாறிக் கொண்டிருக்கின்றது. அங்கு வீசும் கடுங்காற்றினால் கடல் தரையிலிருந்து தூசுகளும், உப்புத்துணிக்கைகளும் பாகிஸ்தான் வரை எடுத்து வரப்படுகிறது. இக்கடலானது வருடமொன்றிற்கு 27 கன கிலோமீற்றர் அளவு இழந்து கொண்டிருக்கின்றது. இப்படியே சென்றால் இக்கடலானது இன்னும் 20 வருடங்களில் இல்லாது மறைந்து விடும் என அமிரிக்காவில் உள்ள ஒகியோ பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள். இதனால் கடல் நீரின் அளவானது 3mm அதிகரிக்கும் என்றும் கூறியுள்ளனர். ஏரல்க் கடல் பாலைவனமாக மாறிக் கொண்டிருப்பதால் கடற் கப்பல்களுக்குப் பதிலாக பாலைவனக் கப்பலான ஒட்டகத்தைப் பாவிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு மத்தி ஆசிய குடியரசு மக்களும் தள்ளப்பட்டுள்ளார்கள். மனிதனின் திட்டமிடாத குறுகிய நோக்கில் இயற்கையை மாற்றி அமைத்தையும் இதனால் ஏற்பட்ட பாதிப்புக்களையும் தெட்டத் தெளிவாகக் காட்டியுள்ளது.

> ...சூழல் மாசடைவதால் பாலைவனமாக மாறும் ஏரல் கடலில் இனிமேல் கடற் கப்பலுக்குப் பதில் பாலைவனக் கப்பலான ஒட்டகத்தையே பாவிக்க வேண்டி வரலாம்...

— சுகந்த நேசன் —

# விடியுமாடா?
# வெகுவிரைவில்

உள்ளத்தில் இருப்பதையெல்லாம்
உணர்ச்சிகளால் வரைவதற்கு
உரிமைகள் மறுக்கப்பட்டாலும்
உள்ளத்தில் சற்று கூற
விழைகின்றேன் நானிங்கு

வசந்தங்களும் இளமைகளும்
கருகிப்போக
அவலங்களும் துயரங்களும்
துளித்து நிற்க
வார்த்தைகளைத் தொலைத்துவிட்டு
தவிக்கின்றான் தமிழன் அங்கு.

வைகறைப் பொழுதுக்காக
தாமரைதான் தவிக்கின்றதா- இல்லை
தமிழனும் அங்கு தவிக்கின்றான்
மலராத தன் விடிவுக்காக

உள்ளத்தில் இன்றும் நான் சொல்கின்றேன்.

பால் மணம் மாறும் முன்
பாலகன் போர்க்களத்தில்
பூ மணம் மாறு முன்
மொட்டுகள் எதிரிகளின் மஞ்சத்தில்
இட்ட திலகம் காயுமுன்
கொண்டவன் கொடும் போரில்

இந்நிலை மாறுமடா எம் பூமியில்
விடியுமடா நல்ல பொழுது
மலருமடா மண்ணில் சுதந்திரப் பூக்கள்
படியுமடா தியாகங்கள் பாதச் சுவடு
மடியுமடா எதிரியின் ஆணவம்
ஒடியுமடா எம்மவரின் சூழ்ச்சி
வெகுவிரைவில்.

வ.சிவகாந்தன்

## கண்டவற்றில் சில வரிகள்

பரத நாட்டிய அரங்கேற்றம் பல காரணங்களுக்காக நடைபெறும் லண்டனில் அத்தோடு கூட இன்னொரு காரணமும் உண்டு.

அல்லது,

ஆகவே எல்லாவற்றுக்கும் முக்கிய காரணமாய்க் கூட அமைவது உண்டு. ஒரு காலத்தில் கோயில்களிலும், பண்ணையார் வீடுகளிலும், தெருக்களிலும் என்று போனதும் இளிவாக பேசப்பட்டதும் இந்த ஆடற் கலை.

தேவ அடியாள் .......... என்று சுருக்கமாய் சொல்லப்பட்டது.

"சின்னமேளம்" என்றும் சிலர் கேள்விப்பட்டிருப்பீர்கள். சில வேளைகளில் இந்தியாவிலிருந்து சின்ன மேளம் பிடிக்க வேண்டிய சூழ்நிலைகளும் இருந்ததுண்டு.

காரணம் ஆடும் திறமையுள்ளவர்கள் ஈழத்தில் இல்லை என்பதால் அல்ல, இதற்கு, சமூக அந்தஸ்து குறைந்தவர்கள் ஆடும் கலை என்பதாலேயே!

இப்போது எல்லாம் அது மாறிற்று.

நல்லதும், வரவேற்கக் கூடிய மாற்றம்.

கலையின் புனிதத்தையும், அவசியத்தையும் காலம் கடந்தாவது கற்றுக் கொண்டோமே!

நாம் ஒரு போதும் காலத்தை முந்திக் கற்றுக் கொள்வதுமில்லை முயற்சிப்பதும் இல்லையே!

அப்படி நடந்திருந்தால் ஏன் அகதிகளாய்......

நல்ல மாற்றத்திலும் சில தீமைகள்.

கௌரவக் குறைச்சலாக காணப்பட்ட ஆட்டம் கௌரவமாக மாறிய போது, கௌரவமான கலையின் ஆரங்கேற்றத்தில் கர்வம் காற்றடிக்கத் தொடங்கிவிட்டது..

இதுவரை பத்து பன்னிரண்டு அரங்கேற்றங்களுக்கு போயிருப்பேன். ஒன்றிலிருந்து இன்னொன்று சளைத்ததல்ல என்பதை காட்டிக் கொண்டன.

ஒரு அரங்கேற்றம் 25000 பவுண்ஸ் செலவில் நடந்தேறியது.

இங்கே ஆரங்கேற்றம் பரத நாட்டியத்திற்கானா? அல்லது, பரதம் ஆடிய பெண்ணின் பெற்றோரின் பணத்திற் கலைமிழந்து

பணம் பலத்தைக் காட்டியது.

அங்கு பார்க்க கூடிமிருந்த (விருப்பமில்லாவிடினும் மனிசன் இன்விற்றேசன் தந்து வராட்டி உம்மட விசேசத்துக்கு வரமாட்டன் என்ற காரணத்தால் வந்திருந்தார்) ஒருவரிடம் கேட்டேன் ஏன் இவ்வளவு ஆடம்பரமாய் செய்யுது, அரங்கேற்றத்தின் நினைவாக அன்பு இல்லத்துக்கோ அல்லது வேறு ஒரு அகதி முகாமுக்கோ ஒரு 1000 பவுணை அனுப்பிமிருக்கலாம் தானே என்று.

அவற்றை மனிசியின்றை தம்பிக்காரன் 15000 பவுண் செலவு செய்து மகளின் அரங்கேற்றம் செய்தவராம், அவருக்கு ஒரு பாடம் படிப்பிக்கத்தான் இப்படியாம்.

பரத நாட்டியம் மூலம் பாடமும் படிப்பிக்கலாம்! ஆனால் போட்டி போட்டு அரங்கேற்றம் செய்ய பரத நாட்டியம் என்ன அஞ்சல் ஓட்டமா?

பக்கத்து வீட்டுக்காரி காஞ்சிபுரம் கட்டிமிருந்தால் என்வீட்டிலை கொஞ்சம் கூட மாற்றம் இல்லை.

நாட்டில் விஜயதுங்காவின் படைகள் குண்டு போட்டு பிறந்து ஊரே தரைமட்டமானதே இந்த அரங்கேற்றக்காரர்களின் கண்களுக்குத் தெரியவில்லையா?

அரங்கேறட்டும்: தமிழன் கல்தோன்ற முன் தோன்றியவரைக்கே கல்லாகத்தான் இருப்பான்

மண் தோன்ற முன் தோன்றியபடியால் மாறாமல் தான் இருப்பான்.

கற்றுக்கொடுக்கும் ஆசான்களே! உங்கள் மாணவர்களின் பெற்றோர்களுக்கு சற்றுக் கூறக்கூடாதா? கலை கவலை தரக் கூடதர் என்று..

www.tamilarangam.net

www.tamilarangam.net



# நாட்டிய நர்த்தகி விஜயாம்பிகையுடன் ஒரு நேர்முகப் பேட்டி



கேள்வி 1 – நடனம்–வகைகள்–தோற்றம்–வளர்ச்சி பற்றி விளக்கி கூற முடியுமா?

பதில்
பாரத கலசாரத்தின் சுமார் 200 ஆண்டு பழமையான நாட்டியக் கலைக்கு பரதர் என்னும் முனிவர் இலக்கணம் வகுத்துள்ளார். 'நாட்டிய சாஸ்திரம்' என்ற சமஸ்கிருத மொழி நூலே நமக்கு கிடைத்துள்ள, நாடகவியலைப் பற்றிய நூல்களில் உலகில் மிகத் தொன்மை வாய்ந்தது. எனினும் இந்த நூல் எழுதப்பட்ட காலத்திலேயே "கூத்து" என்ற பெயரில் முதிர்ச்சி பெற்ற ஒரு ஆடற் கலை மரபு பண்டைத் தமிழர் மத்தியில் நிலவியதற்கு சிலப்பதிகாரம் ஆதாரம் தருகிறது–இந்தக் "கூத்து" என்ற நடன மரபே கால ஓட்டத்தில் "சதிர்" போன்ற பல பெயர்களை எடுத்து, மாற்றமடைந்து, இறுதியில் கடந்த அரை நூறாண்டு காலமாக "பரத நாட்டியம்" என்ற பெயரில் புகழ் பரப்பி நிற்கிறது. ஆந்திர மாநிலத்தின் கூச்சுப்பிடி, கேரள மாநிலத்தின் கதகளி, மோகினி ஆட்டம், ஒரிஸ மாநிலத்தின் ஒடிஸி நடனம், வட இந்தியாவின் கதக் நடனம், மணிப்பூர் மாநிலத்தைச் சேர்ந்த மணிபுரி என்பனவும் பாரதத்தின் சாஸ்திரீயே நடனங்கள் ஆகும்.

எனக்கு முதல் முதல் நடனம் சொல்லித் தந்தவர் தஞ்சாவூர் நாட்டிய கர்த்தா என்கண் ஸ்ரீ.டி.எஸ்.கோவிந்த ராஜாபிள்ளை அவர்கள். இவரது மூத்தையர்கள் பரம்பரை பரம்பரையாக சோழ மன்னர்களின் அரண்மனையில் நடன ஆசான்களாள இருந்தவர்கள். எனக்கு முதல் முதல் சலங்கையை எடுத்துக் கொடுத்து காலில் காட்டி விட்டு கமால லஷ்மணன் போல் பேரும் புகழும் பெற வேண்டும் என அவர் வாழ்த்தினார். கலாஷேத்திராவில் பரத நாட்டியம், வீணை, வாய்ப்பாட்டு கற்றுக் கொண்டேன். மேலும் அடையார் கே.லஸ்மணனிடம் பரதமும், குரு டாக்டர் வேம்பட்டி சின்ன சத்தியத்திடம் கூச்சுபுடி நடனமும், மைலாபூர் கௌரியம்மாவிடம் அபிநாயமும் பாவமும், திருச்சூர் ராமநாதனிடம் மோகினி ஆட்டமும் கற்றேன். பத்து ஆண்டுகளுக்கு மேலாக இக் கலைகளை தமிழ் நாட்டில் கற்றுக் கொண்டேன்.

கேள்வி 2– இத்துறையில உங்களின் ஆர்வத்திற்கு காரணம் என்ன?

பதில்
சிறுவயதில் சினிமாவில் வரும் கமால லஸ்மணனின் நடனங்களை பார்த்து அப்படியே வீட்டில் திருப்பி ஆடுவேனாம். அதனால் எனது பெற்றோர்கள் நான் நடனம் கற்க ஏற்பாடு செய்தார்கள்.

கேள்வி 3– உங்கள் முதலாவது அரங்கேற்றம் எப்போ எங்கு நடைபெற்றது?

பதில்
எனது நடன அரங்கேற்றம் 1970ல் சென்னை மியூஸியம் தியேட்டரில் அன்றைய முதல் அமைச்சர் கலைஞர் மு. கருனா நிதியின் தலைமையில் நடைப் பெற்றது. அன்று கலைஞர் அவர்கள் சொன்னார்கள். "எத்தனையோ பேரின் நடனங்களை நான் பார்த்திருக்கிறேன். விஜயாம்பிகையின் நடனத்தில் தாள சுத்தமும், முகபாவமும், கை அசைவுகளும், உடல் அமைப்பும் நன்கு பொருந்திமிருக்கின்றன. எதிர் காலத்தில் அவருக்கு நல்ல முன்னேற்றம் உண்டு என்பதை நான் நிச்சயமாகச் சொல்வேன்"
ஏதோ என் ரசிகர்களின் ஆசியுடன் இக் கலைக்கு என்னால் ஆனதைச் செய்து வருகிறேன்.

கேள்வி 4– கலையை தொடர்ந்து பின் பற்றி வருவதில் உங்களுக்கு கிடைந்த அனுபவம்?

பதில்
எனது நடனத்துறை அனுபவத்தைப் பொறுத்த மட்டில், நான் அரங்கேற்றம் செய்து இன்று வரை 24 வருடங்கள் ஆகின்றன. 600 தடவைகளுக்கு மேல் மேடைகளில், தொலைக்காட்சியில், திரைப்படங்களில், தனி நடனங்கள் ஆடியிருக்கிறேன். உலகின் பல நாடுகளில் ஆடியிருக்கிறேன். புதுமைகளைப் புகுத்தி, நடன அமைப்புச் செய்து பல நாட்டிய நடனங்களைத் தாயரித்து அவற்றில் ஆடியும் இருக்கிறேன். நூற்றுக்கணக்கான நர்த்தகிளுக்கு நடன ஆசிரியையாக இருந்திருக்கிறேன். எனது மாணவியருக்கு மூன்று நாடுகளில் – இலங்கையில், இந்தியாவில், லண்டனில் நடன அரங்கேற்றங்கள் செய்திருக்கிறேன். இந்த 24 ஆண்டு காலத்தில் குறிப்பிடத்தக்க, நினைவில் நிற்கும் அனுபவங்கள் எண்ணற்றவை. அவற்றை ஒரு நூலகவே எழுதலாம்.

கேள்வி 5– லண்டனில் பயிற்சி அளிப்பதில் நீங்கள் அடையும் சிரமம்– வெற்றி தோல்விகள்.

லண்டனில் நடனம் கற்றுக் கொள்வதற்கு மாணவிகளுக்கு நேரம் போதாக்குறை ஒரு பிரச்சினை. ஐந்து வருட காலமாக கலாஷேத்ராவில் ஒவ்வொரு நாளும் நடனம் சொல்லித் தரப்படுகிறது. லண்டனில் வாரத்திற்கு ஒரு தடவை ஒரு மணி நேரம், "குறூப் கிளாஸில்" நடனம் பயிலுகின்றனர். வீட்டிலும் போதிய அளவு பயிற்சி செய்வதில்லை. சிலர் நடனத்தில் நல்ல ஆர்வத்துடன் அரங்கேற்றத்தின் பின்னரும் தொடர்ந்து ஆட வேண்டும் என்ற இலட்சியத்துடன் படிக்கிறார்கள். இப்படிப்பட்ட மாணவிகளுக்கு கற்று கொடுப்பது ஒரு இனிமையான சுகானுபவம். சிலர் அரங்கேற்றத்துடன் முற்றுப்புள்ளி வைத்து விட்டு திருமணம் செய்து கொள்ளுகிறார்கள் சில மாணவிகள் பெற்றோரின் வற்புறுத்தக்காக படிக்கிறார்கள். சில பெற்றோர்கள் தன்னுடைய மகளும் நடனம் படிக்கிறாள் என்ற பெயர் மட்டும் போதும் என்று நினைக்கிறார்கள். வேறு சிலர் வானவில்லின் பல விதவர்ணங்களும் அமைந்த நடன ஆடைகளையும், தினுசு தினிசான நகைகளையும் 30 நிமிடங்களுக்கு ஒரு தடவை மாற்றி மாற்றி மேடையில் தமது மகள் ஆடினால் போதும், நடனம் எக்கேடு கெட்டாலென்ன, தமது பொருளாதாரா மேன்மை ஊர் அறியப் பிரபலியமானால் போதுமென நினைக்கிறார்கள். இன்னும் சில பெற்றோர்கள் அதை ஒரு உடற் பயிற்சியாக மட்டும் நினைக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட மாணவிகளுக்குச் சொல்லிக் கொடுப்பது நல்ல தரமும், திறமையும் உள்ள ஒரு ஆசிரியைக்கு உண்மையில் ஒரு தண்டனையாகும். சில வேளைகளில் நல்ல திறமையுள்ள ஒரு மாணவிக்கு அவரை ஊக்கிவிக்கும் பெற்றோர் அமைவதில்லை. அது போல, பிள்ளைகளை நடனத்துறையில் நல்லப்படி ஊக்கிவிக்கத் தயாராய் உள்ள பெற்றோருக்கு திறமையுள்ள பிள்ளைகள் வாய்ப்பதில்லை. ஒரு நடன ஆசிரியையின் பணி லண்டனில் எவ்வளவு கடினமானது என்பதை இதற்கு மேலும் விளக்க தேவையில்லை.

கேள்வி 6– உங்கள் மகள் பற்றி.

பதில்:
வினோதினிக்கு நடனத்துறையில் இயல்பான ஆர்வம் உண்டு. நான் என் மாணவிகளுக்கு நடனம் கற்றுக் கொர்டுப்பதை விளையாட்டு விளையாட்டாகப் பார்த்து விஷயத்தை கிரகித்துக் கொண்டவாள். இறுதியில் "பாலிஷங்" மட்டுமே நான் செய்ய வேண்டியிருந்தது. எட்டு வயதில் சென்னையில் டாக்டர் பாலமுரளி கிருஸ்ணா முன்னிலையில் அரங்கேற்றம் செய்து அவரால் "ஜீனியஸ்" என்றும் "இளவயது மேதை" என்றும் பாரட்டுப் பெற்றவள்.
தனது அரங்கேற்றத்தின் உருப்படிகள் இரண்டிற்கு தானே நடன அமைப்புச் செய்தவள். இன்று எனக்கு நடன அமைப்பில் உதவி செய்து வருகிறாள். இறைவன் சித்தப்படி நடனத்துறையில் அவளது எதிர் காலம் அமையும்.

கேள்வி 7– கலையை வெறும் கலைக்காகவே என்று எண்ணுபவர்கள் பற்றி?

பதில்:
அனுதாபப் படுவதை விட வேறு என்ன செய்ய முடியும்? மக்கள் அவர்களை ஒரங் கட்டி விடுவார்கள்.

கேள்வி 8– பழைய காலத்தில் வடிவமைக்கப்பட்ட நடனமுறைகளை உதாரணமாக–கண்ணா வருவாயா? என்பன போன்ற நடனங்களையே மீண்டும் மீண்டும் மேடையேற்றும் கலைஞர்களைப் பற்றி நீங்கள் சொல்ல விரும்புவது?

பதில்:
இவர்கள் எந்த காலத்திலாவது ஒழுங்காக நடனம் கற்றதும் இல்லை, ஆடியதும் இல்லை, நடனம் சொல்லிக் கொடுத்ததும் இல்லை. சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும். இதைச் சொல்ல வேண்டி வந்ததற்காக வருத்தப்படுகிறேன். தற்போது ஐரோப்பாவில் திடீர் நடன ஆசிரியைகளாக முளைத்துள்ளனர். இவர்களுள் அரைகுறையாக இலங்கையில் நடனம் கற்றவர்கள், சாதாரண பாடசாகைளில் ஒரு "பீரியட்" நடனம் கற்றவர்கள், அரங்கேற்றத்துடன் நடனத்திற்கு மூட்டை கட்டியவர்கள் என்று பலர் அடங்குவர். பொதுவாக ஒரே ஒரு மார்க்கம் கற்ற பின் தான் இன்று நடனம் அரங்கேற்றம் செய்கின்றனர். இந்த ஒரே ஒரு மார்க்கத்துடன் நடன ஆசிரியையாக முடியாது. அப்படி நடன ஆசிரியை ஆனால் ஒரே சரக்கை ஆயிரம் தடவை திருப்பித் திருப்பி செய்வதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியாது. இலங்கையில் இருந்த இடம் தெரியாமல் இருந்த பலர் ஐரோப்பிய நாடுகளில் "ஆலை இல்லாத ஊருக்கு இலுப்பம்பூ சர்க்கரை" என்ற மாதிரி "உலகப் புகழ் பெற்ற" கலைஞர்களாக தம்மை வர்ணித்துக் கொண்டு "கலை வியாபாரம் செய்வதை நாம் காண்கின்றோம். கலாஷேத்திராவின் காலடி மணலையே தமது வாழ்க்கையில் மிதிக்காதவர்கள்", "கலாஷேத்திரா புகழ்" என்று தம்மை வர்ணித்துக்கொண்டு அப்பாவித் தமிழ் மக்களை ஏமாற்றி வியாபாரம் செய்வதை இன்று ஐரோப்பாவில் நாம் காண்கிறோம். மூன்று மாதம், ஆறு மாதம் இந்தியாவில் படித்து விட்டு, தமது இலங்கை குருக்களின் பெயரை இருட்டடிப்பு செய்து விட்டு இந்தியாவில் நடனம் படித்த ஆசிரியை என்று போலி வியாபாரம் செய்பவர் பலர். இவர்கள் தான் நடன நிகழ்ச்சிகளில் "சின்னச் சின்ன ஆசை சிறகடிக்கும் ஆசை" போன்ற புகழ் பெற்ற சினிமாப் பாடல்களுக்கு தமது மாணவியரை மேடையில் ஏற்றி உடம்பை நெளிக்க விட்டு, அந்தப் பாடலின் கவர்ச்சியை தமது நடனத் திறமையாக அப்பாவித் தமிழ் மக்களுக்குக் காட்டி ஏமாற்றிச் சம்பாதிப்பவர்கள். இந்த அரை வேக்காடுகள் கையாளும் உபாயம் தாம் பிறந்த கிராமத்தின் பெயரைச் செல்லி "நான் உங்கள் ஊரவள், எனக்கு ஆதரவு தாருங்கள்" என்று கேட்பார்கள். சாஸ்திரிய நீதியான புதுப் புது அம்சங்களை மேடையேற்ற இவர்களால் முடியாது என்பதில் ஆச்சரியமில்லை.

**இன்னும் வரும்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கையின் அரை நூற்றாண்டு சுதந்திரம்

By s. s. Nathan

இலங்கையின் அரை நூற்றாண்டு சரித்திரம் (1944–1994)

இலங்கையின் அரை நூற்றாண்டுச் சரித்திரத்தை எழுதும் பொழுது 1994 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட சம்பவங்களையும் குறிப்பிடுவது சாலப் பொருத்தமானதாக இருக்கும் என்பது என்னுடைய கருத்தாகும். சரித்திரம் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து இருப்பதாலும் அன்று நடந்த சம்பவங்களின் தாக்கங்கள் இன்று புரையோடி பெரும் பூகம்பமாக வெடித்திருப்பதாலும் மிகச் சுருக்கமாக இக் கட்டுரையில் அவற்றைக் குறிப்பிடுவது மிக இன்றியமையாததாகும். இலங்கை 1505 ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் ஆட்சி செய்தனர். போர்த்துக்கேயரிடமிருந்து டச்சுக்காரர் 1656 ஆம் ஆண்டு ஆட்சியைக் கைப்பற்றினர் டச்சுக்காரரிடமிருந்து. 1796 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சியில் நிர்வாக சுதந்திரற்காக 1833 ஆம் ஆண்டு வெவ்வேறாக இருந்த தமிழ், சிங்கள பிரதேசங்களை ஒன்றிணைத்தனர். அதே ஆண்டிலேயே சட்ட சபை அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கு பின் 1946 ஆம் ஆண்டு சோல்பரி அரசியலமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. இச் சோல்பரி அரசியலமைப்பில் சிறுபான்மையினரின் பாதுகாப்புக்கான சரத்து 29(2) சேர்க்கப்பட்டது. இச் சோல்பரி அரசியல் அமைப்பின் கீழ் 1947ம் ஆண்டுத் தேர்தல், 1952ம் ஆண்டுத் தேர்தல், 1956ம் ஆண்டுத் தேர்தல், 1960 மார்ச் மாதத் தேர்தல், 1960 ஜுலை மாதத் தேர்தல், 1965ம் ஆண்டுத் தேர்தல், 1970ம் ஆண்டுத் தேர்தல் ஆகியவை நடத்தப்பட்டன. 1970ம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, கம்யுனிஸ்ட் கட்சி அங்கத்தவர்கள், தங்களை ஒரு அரசியல் நிர்ணய சபையாக்கி 1972ம் ஆண்டு மே மாதம் புதிய அரசியலமைப்புச் சட்டத்தை வெளியிட்டனர். இதில் முக்கிய அம்சம் சிறுபான்மையினருக்கு பாதுகாப்பாக இருந்த சரத்து 29(2) அரசியல் அமைப்புச் சட்டத்திலிருந்து அகற்றப்பட்டது. இவ் அரசியலமைப்புச் சட்டத்திற்கமைய 1977ஆம் ஆண்டுத் தேர்தல் நடத்தப்பட்டது. இதில் ஐக்கிய தேசியக் கட்சி மிகப் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சி அமைத்தது. தமிழ் பிரதேசங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணி மிகப் பெரும்பான்மை அங்கத்தவர்களுடன் பாராளுமன்றம் சென்றனர். முதல் முதலாக இலங்கை அரசியல் வரலாற்றில் தமிழர் ஆகிய திரு அ. அமிர்தலிங்கம் எதிர்க்கட்சி தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். மிகப் பெரும்பான்மை பலத்துடன் தெரிவு செய்யப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற அங்கத்தவர்களையே அரசியல் நிர்ணய சபையாக்கி சிறுபான்மை மக்களின் கோரிக்கைகளை புறக்கணித்தது. 1978ம் ஆண்டு புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கியது. இவ் அரசியல் அமைப்புச் சட்டத்திலும் சிறுபான்மையினரைக்கு பாதுகாப்பாக இருந்த 29(2) சரத்து இருக்கவில்லை. இவ் அரசியல் அமைப்புச் சட்டம் விகித சமப் பிரதினிதித்துவ முறையை அறிமுகப் படுத்தியது. இவ் அரசில் அமைப்புச் சட்டம் ஆறு ஆண்டு காலத்துக்கு ஒருமுறை பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று கூறிய பொழுதினும் 1983ம் ஆண்டு சர்வசன வாக்கெடுப்பின் மூலம் பாராளுமன்றத் தேர்தல் நடத்தாமலே பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் இன்னும் ஆறு ஆண்டு காலத்துக்கு நீடிக்கப் பட்டது. இதனை எதிர்த்து தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் பாராளுமன்றம் செல்லாததால் தங்கள் உறுப்பினர் பதவிகளை இழந்தனர். இதன் பின்னர் தமிழர் பிரதிநிதிகள் இல்லாமலே பாராளுமன்றம் கூடியது. 1989ம் ஆண்டு மீண்டும் பாராளுமன்றத் தேர்தல் நடத்தப் பட்டது. இத் தேர்தலிலும் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி பீடம் ஏறியது.

இத் தேர்தலின் முக்கிய அம்சம் முன்பு தமிழர்களைப் பிரதிநிதித்துவப் படுத்திய தமிழர் விடுதலைக் கூட்டணி படுதோல்வியைத் தழுவிக் கொண்டது மட்டுமல்ல அதன் உறுப்பினர்கள் ஒருவராவது பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப் படவில்லை. இதற்கு முன்னோடியாக 1982ம் ஆண்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவு செய்யப்பட்டார். 1988ம் ஆண்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக திரு ஆர். பிரேமதாசா தெரிவுசெய்யப்பட்டார். இவர்களின் நிறைவேற்று அதிகாரங்களின் பயனாக பிரச்சனைகள் தீர்க்கப்பட்டனவா என்பதை இக்கட்டுரையில் பின் விளக்கமாக எழுதுகிறேன்.

1948ம் ஆண்டு பெப்பரவரி மாதம் இலங்கை சுதந்திரம் அடைந்தது. 1972ம் ஆண்டு மே மாதம் 22ம் திகதி இலங்கை குடியரசு ஆகியது. பின்பு ஆக்கப்பட்ட அரசியலமைப்பில் மக்கள் சுபீட்சமாக வாழ்ந்தார்களா? இனப் பிராச்சினை தீர்க்கப்படாதா? கல்வி, தொழில், பிரதேசம் என்பனவற்றில் சிறுபான்மையினரின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டனவா என்பதை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும். இதற்காகவே கடந்த அரை நூற்றாண்டில் இலங்கை என்ற தலைப்பைத் தேர்ந்தெடுத்தேன். தமிழர் களை பிரதிநிதித்துவப் படுத்துவதற்காக தமிழ் காங்கிரஸ் என்ற அரசியல் கட்சியில் தொடங்கி இன்று எத்தனையோ அரசியல் கட்சிகள் உருப் பெற்று விட்டன. சிங்கள மக்களுக்கும் லங்கா சமசமாஜக் கட்சியிலும், இலங்கைத் தேசிய காங்கிரசிலும் தொடங்கி பல அரசியர் கடசிகள் உருவெடுத்து விட்டன. இலங்கைத் தேசிய காங்கிரஸ் பின்பு ஐக்கிய தேசியக் கட்சியாக உருவெடுத்து 1928ம் ஆண்டு ஏ. ஈ. குணசிங்க இலங்கை தொழிலாளர் கட்சியை ஸ்தாபித்தார். இதற்குப் பின் சிங்கள மக்களிடையேயும் பல அரசியல் கட்சிகள் தோன்றின, பல மறைந்தும் விட்டன. இக்கட்சி அரசியல் முறையினால் ஜனநாயகம் எவ்வாறு காப்பாற்றப் பட்டது என்பதும் இக்கட்டுரையின் முக்கிய விடயங்களில் ஒன்றாகும்.

இலங்கை 25, 332 சதுர மைல் பரப்பளவு உடையது. இங்கு முழுச்சனத் தொகையில் சிங்கள இனத்தவர் 71.9வீதம் இருக்கின்றனர். சிங்கள இனத்தவர் கீழ் நாட்டு சிங்களவர் என்றும் மேல்நாட்டு சிங்களவர்கள் என்றும் இரு பிரிவாக இருக்கின்றனர். தமிழ் இனத்தவர்கள் முழு சனத் தொகையில் 20.5 வீதம் இருக்கின்றனர். இவர்கள் இலங்கைத் தமிழர் என்றும் இந்தியத் தமிழர் என்றும் இருவகையால் பிரிக்கலாம். இங்கு இலங்கை முஸ்லீம்கள் 6.5வீதம், இந்திய முஸ்லீம்கள் 0.2வீதம் இருக்கின்றனர். மலாயர்கள் 0.3வீதம் இருக்கின்றனர். இலங்கையில் வாழும் முஸ்லீம்கள் தமிழ் பேசும் மக்களாவார். இலங்கைச் சனத் தொகையில் 27.2 வீதம் மக்கள் தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள். இலங்கையில் 67வீதம் பௌத்த மதமும், 17.6 விதம் இந்து சமயத்தையும், கிறீஸ்தவ சமயத்தை 7.7வீதமும் இஸ்லாம் சமயத்தை 7.1 வீதம் உடையவர்களாகவும் இருக்கின்றனர். இலங்கை ஒன்பது மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவ் ஒன்பது மாகாணங்களும் 25 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வரு மாவட்டங்களிலும் அரசாங்க அதிபர் பூரண அதிகாரம் உடையவராக நியமிக்கப்பட்டு நிர்வாகம் பரவலாக்கப்பட்டுள்ளது. இலங்கையின் பாராளுமன்ற பொதுத் தேர்தல் 1947ம் ஆண்டு ஆகஸ்ட் 23ம் திகதியிலிருந்து செப்டம்பர் 20ம் திகதி வரை நடை பெற்றது. இத் தேர்தலில் இலங்கை தேசிய காங்கிரஸ் 1946ம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சியாக மாற்றப்பட்டது. 1935ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட லங்கா சமசமாஜக் கட்சி கலாநிதி என். எம் பெரேரா தலைமையில் போட்டியிட்டது. ஐக்கியத தேசியக் கட்சி டீ. எஸ் சேனநாயக்கா தலைமையில் போட்டியிட்டது. லங்கா சமசமாஜக் கட்சியிலிருந்து பிரிந்த பொல்ஸ்விக் லெனினிசக் கட்சி கலாநிதி ஆர். டி. சில்வா தலைமையில் போட்டியிட்டது. லங்கா சமசமாஜக் கட்சியிலிருந்து ஏற்கனவே பிரிந்து சென்று 1943ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் இத்தேர்தலில் போட்டியிட்டது. தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா என்ற கோஷத்தை எழுப்பியதோடு தமிழருக்கு 50 விகித பிரதிநிதித்துவத்துக்காக சோல்பரி கமிஷனுக்கு முன்னால் வாதாடிய ஜீ. ஜீ. பொன்னம்பலம் தலைமையில் தமிழ் காங்கிரஸ் கட்சி இத்தேர்தலில் போட்டியிட்டது. இக்கட்சி 1944ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் இத் தேர்தலில் போட்டியிட்டது. இதில் பலர் சுயோட்சையாகவும் போட்டியிட்டனர்.

தேர்தல் முடிவுகள் பின்வருமாறு.
பிரதி நிதிகள் தொகை 95

| | |
|---|---|
| ஐ.தே.கா UNP | 42 |
| ல.ச.ச.க L.S.S.P | 10 |
| வி.லெ.க B.L.P | 05 |
| த.கா T.C | 07 |
| இ.இ.கா C.I.C | 08 |
| க.க C.C | 03 |
| சுயேச்சை | 20 |

இலங்கையின் முதலாவது பிரதமராக திரு டீ. எஸ் சேனநாயக்கா பதவி யேற்றார். மந்திரி சபையில் தனது இரு மருமிக்களாகிய சேர் ஜோன் கொத்தலாவைக்கும் ஆர் ஜி சேனநாயகாவுக்கும் இடம் கொடுத்தார். தனது மகனான டட்லி சேனநாயக்காவையும் மந்திரி சபையில் சேர்த்துக்கொண்டார். தனது உறவினரான ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்கும் மந்திரி சபையில் இடம் கொடுத்தார். சுயேட்சையாக போட்டியிடு வெற்றி பெற்ற தமிழர்களாகிய சி. சிதம்பரம், திரு. கி. சுந்தரலிங்கம் ஆகியோருக்கு மந்திரி சபையில் இடம் கிடைத்தது. மொத்தமாக 14பேர் கொண்ட மந்திரி சபை அமைக்கப்பட்டது. இலங்கையின் முதல் எதிர்க் கட்சித் தலைவராக கலாநிதி என். எம் பெரேரா தெரிவு செய்யப்பட்டார். 1949ம் ஆண்டு தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் அரசாங்கத்துடன் சேர்ந்தார். இவருக்கு மந்திரிப் பதவி வழங்கப்பட்டது. 1949ம் ஆண்டு இந்தியத் தமிழருக்கு வாக்குரிமை பறிக்கும் சட்டம் கொண்டுவரப் பட்டது. இதனை எதிர்த்து தமிழ் காங்கிரஸ் பாராளுமன்ற அங்கத்தவர்களான திரு எஸ். ஜே. வி செல்வநாயகமும், திரு சீ. வன்னியசிங்கமும் வாக்களித்தனர், அதே 1949ம் ஆண்டு இவர்கள் இருவரும் தமிழரசுக் கட்சியை ஸ்தாபித்தனர்.

(இன்னும் வரும்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1994ம் ஆண்டைத் தேர்தல் ஆண்டாக ஜனாதிபதி அறிவிப்பு

- உள்ளூராட்சித் தேர்தல்
- பாராளுமன்றத் தேர்தல்
- ஜனாதிபதி தேர்தல்

# சிறுபான்மையினரின் உரிமைகளுக்கு அடிக்கப்படும் சாவுமணியா?

**தம்பு திருநாவுக்கரசு**

சுதந்திரமான, ஜனநாயகரீதியிலான ஒரு தேர்தலை நடத்துவதற்கு உரிய இசைவான சூழல் இல்லை. யுத்த சூழ்நிலைக்கு மத்தியிலும், பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் நிலவும் நிலைமையிலும் வவுனியாவிலோ அல்லது கிழக்கிலோ உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்களை நடத்த முடியாது என சிறுபான்மை கட்சிகளும் ஆளும் கட்சியின் பிரதேச முகவர்களும் வலியுறுத்திய போதிலும் அந்த ஜனநாயகரீதியான குரல்களை அலட்சியப்படுத்திவிட்டு வடகிழக்கில் உள்ள சிறுபான்மை மக்கள் மீது உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை இலங்கையின் ஜனாதிபதி திணித்துள்ளார்.

நியாயமான, அரசியல் ஜனநாயக உரிமைகளைக் கோரி, நாடு சுதந்திரமடைந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக பல வகையான வழி முறைகளிலும் தொடர்ச்சியாகப் போராடிவரும் சிறுபான்மையினரான தமிழ் மக்களையும், முஸ்லீம் மக்களையும் ஓரங்கட்டி நசுக்கி அழிப்பதற்கான முழுமுயற்சிகளையும் புதிய ஜனாதிபதியான டிங்கிரி பண்டா விஜேதுங்க மேற்கொண்டு வருகின்றார். இந்த முயற்சிகளுக்கான ஆரம்ப பிள்ளையார் சுழிதான் மார்ச் முதலாம் திகதி நடாத்தப்படவுள்ள, கிழக்கு மற்றும் வவுனியா நகரசபை உட்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலாகும்.

மேலோட்டமான பார்வையில் ஒரு ஜனநாயக நாட்டில் காலத்திற்குக் காலம் மக்கள் தமது வாக்குரிமையைப் பயன்படுத்தி தமது அரசியல் உரிமைகளை நிலைநாட்டவும், அரசியல் உணர்வுகளை வெளிப்படுத்தவும் வழிகோல உதவும் தேர்தல்களையே இலங்கை அரசும் நடாத்தப் போகிறது என்று தோற்றலாம். ஆனால் பல உள்நோக்கங்களைக் கொண்டுள்ள இந்த தேர்தல்கள் இந்த நாட்டின் ஜனநாயக, அரசியல் வழிமுறைகளுக்கு அடிக்கப்படும் சாவு மணியாகவே விளங்கப் போகின்றன என்பதில் சந்தேகமில்லை.

சமமான அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டதை எதிர்த்து நாட்டின் வடகிழக்குப் பிரதேசத்தில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக மிகக் கோரமான யுத்தம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அது இனப்பிரச்சினையல்ல; வெறுமையான பயங்கரவாதப் பிரச்சினையே எனக் கூறி அதற்கு இராணுவ அடக்குமுறையின் மூலமே தீர்வு காணமுடியும், தீர்வு காணப்பட வேண்டும் எனத் தீர்மானித்து அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.

இதனால், யுத்த செலவினங்கள் 25 ஆயிரம் கோடி ரூபாவாக உயர்ந்து நாட்டின் மொத்த செலவினத்தில் 30 வீதத்தை எட்டிப் பிடித்துள்ளது. ஒரு லட்சத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் நாட்டின் படைவீரர்களில், வடகிழக்கு யுத்தம் தந்த கசப்பான போர் முன்னை அனுபவங்கள் காரணமாக 22,522 படைவீரர்கள் தமது படையணிகளை விட்டுத் திருட்டுத்தனமாக வெளியேறி ஓடிப்போயுள்ளார்கள். இவர்களில் பெரும்பகுதியினர் ஆயுதங்களோடு தலைமறைவு வாழ்க்கை நடத்துவதோடு ஆங்காங்கே பொதுமக்களைத் துவக்கு முனையில் மிரட்டியும் கொலை செய்தும் கொள்ளைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். இவர்களது இந்தச் செயல் பொதுமக்களின் பாதுகாப்பிற்குப் பெரும் அச்சுறுத்தலாயுள்ளது.

கடந்த 1987 ஆம் ஆண்டுவரை அரசுக்கு எதிராகத் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காகத் தனிநாடு கோரி ஆயுதப் போராட்டம் நடத்தி, இந்திய -இலங்கை ஒப்பந்தத்தையடுத்து ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்துகொண்ட, விடுதலைப்புலிகளைத் தவிர்ந்த ஏனைய குழுக்கள் அரசாங்கத்தின் இராணுவ அணுகுமுறை காரணமாகச் சங்கடமான நிலைமைக்கு ஆளாகியுள்ளன. புலிகளிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்திற்காக அரசபடைகளுடன் இணைந்து புலிகளுக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அதேவேளையில் அரசியல் ரீதியாக இலங்கையின் ஒற்றையாட்சிக் கட்டமைப்பிற்குள் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய ஓர் இறுதித் தீர்வுக்கான முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளன.

எனினும் அரசாங்கத்தின் உறுதியற்ற போக்கும் தமிழ்ப் பிரச்சினைக்கு ஆக்கபூர்வமான நம்பிக்கை வைக்கக் கூடிய தீர்வுக்கான ஆலோசனைகளை, இதுவரையிலும் மேற்கொள்ளப்பட்ட சமரச முயற்சிகளின் போது முன்வைக்காத நழுவல் தன்மையும் இந்தக் குழுக்களின் எதிர்காலம் குறித்த நியாயமான கவலைகளை ஏற்படுத்தியுள்ளதைக் காண முடிகின்றது..

இலங்கையின் சிறுபான்மை இனமக்கள் பெரும்பான்மை இனத்தவரிலேயே சார்ந்திருக்க வேண்டும்- அவர்களிலேயே தங்கியிருக்க வேண்டும்; இதுகால வரையும் உறுதியான அரசியல் நிலைப்பாட்டிற்கும், திடமான அரசாங்கத் தலைமைகள் ஏற்படுவதற்கும் பெரும்பான்மை இன மக்கள் சிறுபான்மை இனமக்களின் ஆதரவில் தங்கியிருந்த நிலைமைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்ற வெளிப்படையான முடிவோடு அரசாங்கம் செயற்படத் தொடங்கியுள்ளது.

வடகிழக்கு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் பாராளுமன்றத் தேர்தலை நடத்தினாலும் வடகிழக்குப் பகுதிகளைத் தவிர்த்து ஜனாதிபதி தேர்தலை இப்போதுள்ள அரசியலமைப்பு விதிகளுக்கமைய நடத்த முடியாது. எனினும் நாட்டின் ஆட்சி அதிகாரத்தை ஐ.தே. கட்சியே தொடர்ந்தும் வைத்திருக்க வேண்டும் என்பதற்காகவும், நாட்டில் ஜனநாயக நடைமுறை உரிய முறையில் பேணப்படுகின்றது என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டவும் வேண்டும். அதற்கு முன்னோடியாக, பேரினவாதம் தீவிர முனைப்பெடுத்துள்ள தெற்கிலும், யுத்த மேகங்கள் சூழ்ந்துள்ள போதிலும் படையினரின் கட்டுப்பாட்டினுள் வந்துள்ள பிரதேசங்களில், ஜனநாயக வழிமுறையில் இணைந்துள்ள, தமிழ்க் குழுக்கள் மற்றும் முஸ்லீம் அமைப்புக்கள் அரசியல் நடத்தும் பகுதிகளிலும் தனது தேர்தல்கால நிலைமைகள் எப்படியிருக்கிறது என்பதை நாடி பிடித்துப் பார்க்கும் வகையில் வடகிழக்கு உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களையும் தென்மாகாண சபைக்கான தேர்தலையும் அரசாங்கம் சோதனைக் களமாக எதிர்நோக்கவுள்ளது.

ஜனாதிபதி பதவிக்கு வந்த உடனேயே அதிகாரங்கள் முழுவதும் குவிக்கப்பட்டுள்ள நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்படல் வேண்டும் என்று கூறிய ஜனாதிபதி விஜேதுங்க, எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆரம்ப எதிர்ப்புக்கு மத்தியிலும் புதிய ஜனாதிபதியை இலகுவான முறையில் பாராளுமன்ற உறுப்பினர்களின் வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்யப்படுவதற்குரிய மாற்றுவழியை தோற்றுவிப்பதற்கான வழிமுறைகளில் இறங்கியுள்ளார்.

நாட்டு மக்கள் அனைவரினதும் நேரடியான வாக்களிப்பின் மூலம் ஜனாதிபதி ஒருவர் தேர்ந்தெடுக்கப்படும் தேர்தல் முறையை மாற்றி, மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றப் பிரதிநிதிகளிடையே வாக்கெடுப்பு நடத்துவதன் மூலம் ஜனாதிபதியை தெரிவு செய்யும் புதிய முறையை ஏற்படுத்துவதற்கான முயற்சியிலும் விஜேதுங்க முனைந்துள்ளார். இதற்கென பாராளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமைத்து, புதிய ஜனாதிபதி தேர்தல் முறையை சிபாரிசு செய்து ஐ.தே.கட்சியின் சார்பில் அதன் தலைவர் என்ற முறையில் ஆலோசனைகளையும் முன்வைத்துள்ளார்.

பாராளுமன்றத் தேர்தல் முறையிலும் பார்க்க இலங்கையில் உள்ள ஜனாதிபதி தேர்தல் முறை வித்தியாசமானதாகும். பாராளுமன்றத் தேர்தலில் ஒவ்வொரு தேர்தல் மாவட்டமும் ஒவ்வொரு தேர்தல் தொகுதியாக உள்ளது. நாட்டில் உள்ள எல்லாத் தேர்தல் தொகுதிகளிலும் ஒரே நேரத்தில் தேர்தலை நடத்துவதற்கு நிலைமைகள் இடம்தராவிட்டால் ஒருசில தொகுதிகளுக்கான தேர்தலை வசதிக்கேற்ப ஒத்திவைத்து விட்டு நிலைமைகள் இசைவாக உள்ள தொகுதிகளில் தேர்தலை நடத்த முடியும். ஒத்திவைக்கப்பட்ட தொகுதிகளுக்கான தேர்தலை பின்னொரு திகதியில் நடத்தி அப்பகுதிகளுக்கான பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்துகொள்ள இலங்கையின் தேர்தல் நடைமுறைச் சட்டம் இடமளிக்கின்றது.

ஆனால், ஜனாதிபதி தேர்தலைப் பொறுத்த மட்டில் முழு நாடும் ஒரே தேர்தல் தொகுதியாகக் கணிக்கப்படுகின்றது. எனவே, நிலைமைகள் சாதகமாக இல்லாமலிருந்தால் குறிப்பிட்ட பகுதிகளின் வாக்கெடுப்பை வரையறுக்கப்பட்ட காலம் வரை ஒத்திவைக்க முடியும். ஆனால் முதலில் வாக்கெடுப்பு நடைபெற்ற இடங்களின் வாக்குகளை எண்ணும் பணியை, ஒத்திவைக்கப்பட்ட பகுதிகளில் வாக்கெடுப்பை நடத்தி முடிக்கும் வரையில் ஆரம்பிக்க முடியாது. அதாவது நாட்டின் முழுப் பிரதேசங்களிலுமே வாக்கெடுப்பு முடிந்த பின்புதான் வாக்குகளை எண்ணித் தேர்தல் முடிவுகளை அறிவிக்க முடியும்.

ஆகவே, இன்றைய சூழ்நிலையில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வடகிழக்குப் பகுதிகளில் ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்கெடுப்பை முழுமையாக நிறுத்திவிட்டு தேர்தலை நடாத்த முடியாது. இந்த வகையில் வடக்கு கிழக்கு பகுதிகளில் நிலவும் யுத்த நிலை காரணமாகவும், அரசாங்கத்தின் கை வடக்கில் எந்த அதிகாரமும் அற்றதாகப் போயிருப்பதாலும், அரசிற்கு இன்றைய ஜனாதிபதி தேர்தல் முறை ஒரு நெருக்கடியாகவே உள்ளது.

இந்த நிலைமையில், ஜனாதிபதி தேர்தலை நடத்தி முடிப்பதற்கான வழிமுறை என்ன?

அரசாங்கத்தின் வசதிக்கும், ஆளும் கட்சியின் தேவைகளுக்கு ஏற்ற வகையிலும் இலங்கையின் அரசியலமைப்பில் திருத்தங்களைக் கொண்டு வந்து ஜனநாயக நடைமுறை விதிகளுக்கும் அரசியல் அமைப்பின் வழிமுறைகளுக்கும் அமையவே செயற்படுகின்றோம் என்று வெளி உலகிற்கு காட்டிக் கொள்கின்ற செயல் முறையையே ஜனாதிபதி தேர்தலிலும் ஐ.தே.கட்சி அரசாங்கம் கடைப்பிடிக்க முனைந்துள்ளது.

தனக்கு இதுவரையிலும் கிடைத்துள்ள ஆலோசனைகள் சிபார்சுகளின் அடிப்படையில் ஜனாதிபதியைப் பாராளுமன்ற அங்கத்தவர்களே தெரிவு செய்ய வேண்டும் என்ற ஜனாதிபதி விஜேதுங்கவின் கூற்றையே பெரும்பான்மையான ஐ.தே.கட்சி உறுப்பினர்களைக் கொண்ட தெரிவுக்குழு சிபாரிசு செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மார்ச் மாதம் இக் குழுவின் முடிவுகள் வெளியிடப்படவுள்ளன.

புதிய ஜனாதிபதியை நாடு தழுவிய ஒரு தேர்தல் மூலமாக அல்லாமல் பாராளுமன்ற அங்கத்தவர்களது வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்யலாம் என அரசியலமைப்பை மாற்றிவிட்டால் ஒரு கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்தியதாக முடியும்.

ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைந்ததும் ஜனநாயக மரபின்படி ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படுகின்றது. இது முதலாவது.

இரண்டாவதாக, நாடளாவிய தேர்தலின் மூலம் விரும்பிய ஜனாதிபதி ஒருவர் தெரிவுசெய்யப்படும் போது சிறுபான்மை மக்களின் நிபந்தனைகளுடன் கூடிய ஆதரவைத் தேடிப் போக வேண்டிய நிலைமைக்கு ஆளாக வேண்டியதில்லை.

பேரினவாதம் முனைப்பெடுத்து, அதற்கு ஜனாதிபதி விஜேதுங்கவும் (பின் விளைவுகளையோ அல்லது நீதி நியாயங்களையோ கருத்திற் கொள்ளாமல்) முண்டு கொடுத்துக் கொண்டிருக்கின்ற இந்த வேளையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையிலான பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் சிபாரிசுகளை ஏற்கச் செய்து அதே சிங்களப் பேரினவாதத்தின் துணையோடு பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவைப் பெறமுடியும் என்று ஜனாதிபதி விஜேதுங்க மற்றும் ஐ.தே.கட்சியின் தலைமைப்பீட வட்டாரங்களும் உறுதியாக நம்புகின்றன.

இதற்கு, பூநகரி தாக்குதலின் மூலம் முன்னிலும் பார்க்க ராணுவ ரீதியாக கையோங்கிய நிலையில் காணப்படும் புலிகளின் அச்சுறுத்தல்களும் வடகிழக்கு போர் நிலைமைகளும் நிச்சயம் கைகொடுத்து உதவத்தான் போகின்றது.

அரசியல் திருத்தத்திற்கு தேவையான பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவைப் பெற்றதும், அதனை உறுதி செய்து கொள்வதற்காக ஒரு சர்வஜன வாக்கெடுப்பில் அரசாங்கம் ஈடுபடத் தயாராக இல்லை; ஈடுபடவேண்டிய தேவையுமில்லை.

இந்த திருத்தத் தீர்மானத்திற்கு உயர்நீதிமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுவிட்டாலே போதும். இதற்கு இன்றைய நெருக்கடி நிலைமைகள் சாதகமாகவே காணப்படுகின்றன.

சில ஆண்டுகளின் முன்பு பாகிஸ்தானின் அரசதலைவர் பூட்டோவுக்கு எதிராகப் புரட்சி செய்து சியாவுல் ஹக் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய போது அவரது அதிகாரமும் நிர்வாகமும் செல்லுப்படியற்றது எனச் சுட்டிக் காட்டி பாகிஸ்தான் உயர் நீதிமன்றத்தில் சியாவுல் -ஹக்குக்கு எதிராக வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இந்த வழக்குகளை ஆராய்ந்த உயர்நீதிமன்றம் நாட்டின் அப்போதைய பொது நலன்களைக் கருத்திற் கொண்டு அந்த அரசின் ஆளுமையை ஏற்றுக் கொண்டது.

சியாவுல் ஹக்கின் ஆட்சியும் நிர்வாகமும் இல்லாது போனால் அரசு இல்லாத ஓர் (Anarchy) ஓர் ஆபத்தான நிலைமையை நாடு எதிர்கொள்ள நேரிடும். பல விபரீதமான விளைவுகள் ஏற்பட வாய்ப்பாகலாம் எனச் சுட்டிக் காட்டி அந்த அரச நிர்வாகத்திற்கு சட்டரீதியான ஓர் அங்கீகாரத்தை பாகிஸ்தான் உயர் நீதிமன்றம் வழங்கியது.

அதேபோல, இலங்கையில் கடந்த 1956ஆம் ஆண்டு தனியார் பஸ் கம்பனிகளை பண்டாரநாயக்கா அரசு தேசியமயமாக்கியது. அப்போது களனி தொகுதிக்கும் தம்பதெனியா தொகுதிக்கும் இரண்டு வெவ்வேறு வேட்பாளர்களுக்குப் பதிலாக ஆர்.ஜீ.சேனநாயக்காவே இரு தொகுதிகளுக்கும் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார். இதனால் அரசியலமைப்பு விதிகளின்படி பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்க வேண்டிய பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகையில் ஒன்று குறைந்திருந்தது.

இந்த குறைபாட்டை சுட்டிக்காட்டி, அன்றைய பாராளுமன்றம் சட்டரீதியாக பூரணத்துவம் அற்றது என்றும் எனவே அரசியலமைப்பு விதிகளுக்கு அமைய அமைக்கப்படாத ஒரு பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பஸ் கம்பனிகளின் தேசியமயச்சட்டம் சட்டரீதியாகச் செல்லுபடியற்றது. அதனை ஏற்க முடியாது என பாதிக்கப்பட்ட பஸ் கம்பனி உரிமையாளர் ஒருவர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார்.

அன்றைய சூழ்நிலையில் குறைபாடுடையதாக இருந்தாலும் அந்த பாராளுமன்றம் அங்கீகரிக்கத் தக்கது. ஆகவே அதனால் நிறைவேற்றப்பட்ட சட்டமும் செல்லுபடியானது எனத் தீர்ப்புக் கூறிய உயர் நீதிமன்றம் பண்டாரநாயக்கா அரசுக்கு சட்டரீதியான அங்கீகாரத்தை வழங்கியது.

இது போலவே நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும் ஸ்திரமான அரசுக்கும் வட-கிழக்கில் மட்டுமல்லாமல் முழு நாட்டிலுமே புலிகள் அச்சுறுத்தலாக இருக்கின்றார்கள். தீர்க்கப்படாத ஒரு யுத்தமும் நடைபெறுகின்றது என்ற காரணங்களைக் காட்டி ஜனாதிபதி விஜேதுங்க தமக்குத் தேவையான அரசியலமைப்புத் திருத்த மசோதாவுக்கு உயர்நீதிமன்றத்தின் சட்டரீதியான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடிய சாத்தியக் கூறுகளும் இருக்கின்றன.

ஆகவே, வெள்ளி திசையில் ஓடிக் கொண்டிருக்கும் ஜனாதிபதி விஜேதுங்காவின் தலைமையிலான அரசாங்கத்தின் சர்வாதிகார பாணியிலான பெரும்பான்மை இனவாதப் போக்கை யார், எப்படி முடிவுக்கு கொண்டு வரப் போகிறார்கள்?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கவிதைகள்

## என்றும் வாழப்பாடுங்கள்

சோலைக் குயிலைப் பாடுங்கள்
சோடிக் குருவியைப் பாடுங்கள்
நீலக் கடலைப் பாடுங்கள் – அதில்
நீந்தும் மீனையும் பாடுங்கள்

பாடும் வண்டைப் பாடுங்கள்
பறக்கும் பறவையைப் பாடுங்கள்
ஓடும் நதியைப் பாடுங்கள் – அதில்
உறங்கும் முதலையைப் பாருங்கள்

சீந்தில் கொடியைப் பாடுங்கள்
செந்தாமரையைப் பாடுங்கள்
பொன்னாவரசைப் பாடுங்கள்
பொந்துத் தேனையும் பாடுங்கள்

தென்றல் காற்றைப் பாடுங்கள்
தென்னங் கீற்றைப் பாடுங்கள்
செம்பகப் புள்ளைப் பாடுங்கள்
சேற்று நண்டையும் பாடுங்கள்

கொட்டும் மழையைப் பாடுங்கள்
குளத்தையும் வயலையும் பாடுங்கள்
கத்தும் தவளையையும் பாடுங்கள்
கண்டல் காட்டையும் பாடுங்கள்

ஆதிக் குடிகளைப் பாடுங்கள் – அவர்
பாடும் பாடலைப் பாடுங்கள்
எல்லா பிறப்பும் இப் புவியில்
என்றும் வாழப் பாடுங்கள்

பால சிவகடாட்சம்

## கசியும் நினைவுகள் . . .

கனவு ஒன்று காணுகின்றேன்
கனிந்த என் நாட்டைப் பற்றி
நினைவு வந்து பார்க்கையிலே – அங்கு
நிலம் மட்டும் மிஞ்சியது

உரம் செறிந்த உழைப்பாலே
உருவான எம்நாட்டை
உருப்படா அரசங்கே
உரு இழக்கச் செய்ததுவே

உலகமெங்கும் எம் மக்கள்
உடமையின்றி வாழ்கின்றார்
உடன் பிறவா சோதரர்கள்
உயிர்கள் அங்கே போகின்றது

நடைபயின்ற நாடுகளில்
நடைபிணங்கள் மிஞ்சுகின்றன
நாமறிந்த நாடுதனில் – இதுபோல்
நாட்குறிப்பில் வந்ததில்லை

ஆசீர்

## காலம் கரைகிறது

காலம் கரைகிறது
நீ இன்னமும்
மணம் பரப்புகின்றாய்
வண்ணக்குழைமயெலென
காட்சிப் புலன்கள்
வானவில்லின் நிறம் பிரிக்கும்
அணுத்துணிக்கைகள்
நண்பா,
உந்தன் நிறமேது ?
சுடர்கின்றாய்

மரவள்ளித் தோட்டத்தில் நீ
வீழ்ந்து கிடந்தாய்
செம்மண் பாத்திக்கு
நீர் பாய்ந்து கொண்டிருந்தது
தோட்ட வெளிக்கு
எல்லையிட்டு இருக்கும்
பனைகளின் பின்னே,
ஊரின் புறத்திருந்து
விழிகள்
உன்னை மொய்த்திருந்தன
துப்பாக்கிகளின்
முற்றுகை உடைத்து
மாலைச் சூரியன்
உன்னைத் தொடுகின்றான்

சயனைட் குப்பிக்கு
உன்னை ஒப்படைத்துவிட்டு
சிரிக்கின்றாய்
மிளகாய், புகையிலை
வாழையில் எல்லாம்
உந்தன் சிரிப்பலை
படிகின்றது

முதல் வித்து நீ
முன்னறிவித்தவன் நீ

சாத்வீகப் பாதையில்
சந்தி பிரித்தாய்
காலவெளியில்
சுவடுகள் பதித்தாய்
காலக்கரையிலும்
உந்தன் சுவடுகள்

நண்பா,
இப்படியும் காலம் வந்தது
கறையான் புற்றில்
கருநாகங்கள்
அசோகச் சக்கர
நாற்காலி அமர்ந்து
தேச பரிபாலனம்

மரவள்ளிச் செடிகளும்
கண்ணீர் உகுத்தன
அமிலக் கரைசலில்
உந்தன் சுவடுகள்
எரித்தனர்

முள் முடிகளை மக்கள்
தலைகளில்
அறைந்தனர்
துளிர்களைக் கிள்ளியும்
மலர்களைப் பிய்த்தும்
இரத்த நெடியினைத்
துய்த்து நுகர்ந்தனர்

நண்பா,
நீ என்ன சொன்னாய்
கருவிகள் கையெடு
களைகளை அகற்று
இவர்களோ,
வயல்களுக்குத்
தீ வைத்து,
வரப்பினில்
தானிய மணிகள்
பொறுக்கினர்
இந்தக் காலம்
அந்தகாரமானது
பேய்களும்
பேய்க்கணங்களும்
பூதங்களும் என
நர்த்தனம் புரிந்தது

ஆயினும்,
உனது சிரிப்பின் அலைகள்
ஆழ்ந்து விரிந்து
எங்கெங்கும் பரவி
வெட்ட வெட்டத்
தளைத்து

நண்பா,
உந்தன் இளவயதில்
உயிரை வெறுக்கவும்
சயனைட் குப்பியை
உயிரெனக் கொள்ளவும்
செய் அல்லது செத்துமடியென
பிரகடனம் செய்யவும்
எவை உன்னை
உந்தியதோ
இன்னமும் அவை
அப்படியே உன்னை
உந்தன்
ஒளிரும் சுவடுகளும்
எம்மெதிரே விரிகின்றன

கி. பி. அரவிந்தன்

சிவகுமாரனின் 15வது ஆண்டு நினைவு
நாளின் போது . . . .

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கையில்...... கல்வி

## ஓர் ஆய்வு

**மா**றிவரும்

**சமூக பொருளாதார நிலைமைகள் அந்த மாற்றங்களுக்குரிய கல்வி முறையை வேண்டி நிற்கின்றன**

**கல்வி இசைவாக்கமின்றி சமூக நிர்மாணம் முன்னெடுத்துச் செல்லப்பட முடியாது**

**கல்விமுறை சூழலின் வளங்களையும். மாணவர்களின் திறன்களையும் உச்சப் பயன்தரத்தக்க வகையில வளர்த்தெடுக்க துணைநிற்க வேண்டும்**

சமுதாய வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் அவற்றுடன் இணைந்து நிற்கும் தனித்தனியான பண்புக் கூறுகளையும் வரலாற்றுத் தனித்தன்மைகளையும் விஞ்ஞான பூர்வமாக பகுப்பாய்வு செய்தல் முக்கியத்துவம் பெறுகிறது. மாறிவரும் சமூக பொருளாதார நிலைமைகள் அந்த மாற்றங்களுக்குரிய கல்வி முறையை வேண்டி நிற்கின்றன. சமூக நிர்மாணம் அதற்குரிய கல்வி இசைவாக்கமின்றி முன்னெடுத்துச் செல்ல முடியாதுள்ளது.

இன்றைய நிலையிலேயே தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளின் சிக்கல்களும் அதிகரித்துச் செல்வதற்குரிய காரணங்களை ஆராய்ந்து பார்க்கும் போது கூர்மையடைந்து வரும் சித்தாந்த முரண்பாடுகளும் அந்த முரண்பாடுகளை வெளிப்படுத்தி நிற்கும் கல்விமுறையும் கருத்திற் கொள்ளப்பட வேண்டியன. "கடந்த காலங்களில் மனிதர் மீது சுமத்தப்பெற்ற சுரண்டல்களையும் சுமைகளையும் வீழ்த்துவதற்கு மனிதர் தமது புதிய அறிவையும் உற்பத்தி முறைமை பற்றிய விளக்கத்தையும் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். அவற்றின் விளைவாக உணர்வுபூர்வமாக தமது வரலாற்றைத் தாமே ஆக்கிக் கொள்ள முயல்கிறார்கள்" என்றவாறு மார்க்சியக் கல்வியானது அறிமுகம் செய்யப்படுகிறது.

இவற்றிலிருந்து கல்வி என்பது சமூக மாற்றத்திற்கு உரிய கருவியாகவும் புதிய சமுக நிர்மாணத்திற்கான கருவியாகவும் பயன்படுத்தப்படல் ஒரு முனையாக அமைவதை நோக்கமுடிகிறது. அதன் மறுமுனையாக சுரண்டலும் அழுத்தமும் உள்ள ஒரு சமுதாயத்தைக் கட்டிக் காத்தற்கு கல்வியை சாதகமாக வடிவமைக்கும் செயற்பாடு விளங்குவதைக் காணலாம்.

இந்த இருவகையான முரண்பாடுகளை விளங்கிக் கொள்ளுதல் முதற்கண் ஆராயப்பட வேண்டியுள்ளது. அரசியலும், பொருளாதாரமும், கல்வியும், பண்பாடும் ஒரு குறித்த சமூகக் கட்டமைப்பில் ஒன்றுக்கொன்று அனுசரணையான தொடர்புகளைக் கொண்டுள்ளன. எத்தகைய சமூக பொருளாதாரக் கட்டமைப்புக்களிலும் எதிர்கால வளர்ச்சியை நிர்ணயிக்கக்கூடிய பல்வேறு பண்புக் கூறுகளுள் பிரதான இடத்தைக் கல்வி பெற்றுக் கொள்கிறது. சமூக முரண்பாடுகளின் மத்தியில் கல்வி நேர்விளைவுகளையும் எதிர் விளைவுகளையும் செயற்படுவதை அவதானிக்க முடிகிறது. எடுத்துக் காட்டாக பிரித்தானியர் காலத்திலே அவர்களின் சமூக பொருளாதார நடவடிக்கைகளை நிலைநிறுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட கல்விச் செயற்பாடுகள், சுதந்திர வேட்கையை செயற்படுத்தும் இயக்கங்களை உரமூட்டி வந்தன.

சமூக தேவையை பூர்த்தி செய்வதில் எமது கல்வி முறையின் செயலாற்றுகையை ஆராய்வதற்கு முதற்கண் இலங்கையின் கல்விச் சமத்துவ விரிவாக்கத்துக்கான நடவடிக்கைகளை நோக்குதல் வேண்டும்.

அ. தாய் மொழியை கல்வி மொழியாக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

ஆ. அரசாங்கப் பாடசாலைகள், தொழில்நுட்பக் கல்லூரிகள், பல்கலைக் கழகம் ஆகியவற்றில் இலவசக் கல்வியை வழங்கியமை

இ. பாடசாலைகள் அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டமை – இதனால் நாட்டின் 95 சதவீதமான மாணவர்கள் கற்கும் பாடசாலைகளுக்கு அரசாங்கமே முகாமைத்துவத்தை மேற்கொண்டது.

ஈ. நாடு தழுவிய வகையில் நிறுவப்பட்ட 65 மகா வித்தியாலங்கள் க. பொ. த. உயர்தர வகுப்ப வரையிலான கலை, விஞ்ஞான பாடங்களை கற்பிக்கும் ஏற்பாடுகளை மேற்கொண்டன. அங்கு வதிவிட வசதிகளும் ஏற்படுத்தப்பட்டன.

உ. இலங்கை முழுவதற்கும் உரிய வகையில் புலமைப் பரிசில் திட்டங்கள் ஐந்தாம், எட்டாம் வகுப்புகளில் ஏற்படுத்தப்பட்டு மத்திய மகா வித்தியாலங்களில் கற்பதற்குரிய வாய்ப்புகள் வழங்கப் பெற்றன.

மேற்கூறியவற்றோடு இணைந்த வகையிலே அனைத்து மக்களுக்கும் வழங்கப்பட்ட உணவு மானியங்கள், இலவச சுகாதார சேவை முதலிய சமூகநல நடவடிக்கைகள் பாடசாலையில் மாணவர்கள் சேர்ந்து கற்கும் எண்ணிக்கையிலே விரைவான அதிகரிப்பை ஏற்படுத்தின. தேசியக் கட்டாயக் கல்வி பற்றிய சட்டம் இலங்கையிலே காணப்படாவிடினும், சமூகநல விரிவாக்கம் காரணமாக மாணவர்கள் எண்ணிக்கைப் பெருக்கம் நிகழ்ந்தது.

பின்வரும் புள்ளிவிபரங்கள் மாணவர் எண்ணிக்கை அதிகரிப்பைக் காட்டுகின்றன.

கலாநிதி. சபா. ஜெயராசா

| ஆண்டு | மாணவரின் எண்ணிக்கை |
|---|---|
| 1831 | 553, 701 |
| 1947 | 1, 025, 836 |
| 1953 | 1, 564, 848 |
| 1963 | 2, 460, 694 |
| 1970 | 2, 550, 150 |
| 1975 | 2, 543, 600 |
| 1977 | 2, 566, 381 |
| 1984 | 3, 625, 897 |

கல்வி வழங்கலில் ஏற்பட்ட விரிவாக்கம் காரணமாக குடியேற்றவாதக் கல்வியமைப்பு இலங்கையில் உருவாக்கிய கிராமிய, நகர வேறுபாடு, ஆண் பெண் வேறுபாடு என்பவை படிப்படியாக குறைவடையத் தொடங்கின. ஆனால் அவை முற்றாகக் குறைவடைந்தன என்று கூறுவதற்கில்லை. கல்வியின் விரிவாக்கம் நிகழ்ந்தவேளை அதற்குச் சமாந்தரமான முறையில் பொருளாக்கமும் தொழில்வாய்ப்புப் பெருக்கமும் நிகழாமையினால் வரையறுக்கப்பட்ட தொழில்களைப் பெறுவதற்கான போட்டிகள் கூர்மையடையத் தொடங்கின. தொழிற் சந்தையிலே நிரம்பல் அதிகமாயிற்று. இலங்கையின் கல்விக் கொள்கையினைத் தீர்மானிக்கும் பொருட்டு கல்வியமைச்சரிடமே விடப்பட்டுள்ளது. கல்வியமைச்சரின் செயலாளர் கல்விப் பணிப்பாளர் நாயகமாகவும் செயலாற்றுகின்றார். செயலாளருக்குத் துணையாக உதவிச் செயலாளரும் துணைப் பணிப்பாளர் நாயகங்களும் பணிபுரிகின்றனர்.

இவர்கள் பின்வரும் செயல்களுக்குப் பொறுப்பாக உள்ளனர்.

அ. கலைத் திட்டம் வடிவமைத்தலும், பரீட்சித்தலும்

ஆ. பணியிடை, பணிமுன் ஆசிரியர் கல்வி

இ. பாடசாலைகளில் கலைத் திட்ட நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

ஈ. பாடசாலைகளை மீள்ஒழுங்கு செய்தல்

உ. பாடசாலை மேற்பார்வை

இலங்கையின் கல்வி ஒழுங்கமைப்பு மத்தியமயப்படுத்தப்பட்ட ஓர் அமைப்பாகும். கல்வித் திட்டமிடலும் முற்றுமுழுதாக கல்வியமைச்சின் கரங்களில் விடப்பட்டுள்ளன. கட்சியின் கொள்கைகள் இம்மியளவும் வழுவாமல் நடைமுறைப்படுத்தப் படுதவற்குரிய வலைப்பின்னல் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவற்றின் பகைப்புலத்திலேதான் சமூக சேவைகளை பூர்த்தி செய்வதில் கல்வி முறையின் ஆற்றாமை விளக்கப்பட வேண்டியுள்ளது. கல்வி விரிவாக்கத்திற்கு ஏற்றவாறு பேணப்படுகிறதா என்பது முதற்கண் நோக்கப்பட வேண்டியுள்ளது.

கல்வித் தரம் ஆசிரியர் ஆளணியினாலும், கலைத் திட்ட செயற்பாடுகளினாலும் ஈட்டப்படுவதை குறிப்பிட வேண்டியுள்ளது. அரசாங்கம் பாடசாலைகளை பொறுப்பேற்ற பின்னரும் ஒரு மாணவனுக்குரிய நிதி ஒதுக்கீட்டு முறையிலே பாரிய வேறுபாடுகள் நிலவியமை சுட்டிக் காட்டப்படுகிறது.

| | ரூபா | சதம் |
|---|---|---|
| மகா வித்தியாலயம், தெறிப்பே – | 04 | 75 |
| நாவல நமுணுகுல வித்தியாலயம் – | 05 | 52 |
| மகளிர் உயர் கல்லூரி, கண்டி – | 16 | 01 |
| றோயல் கல்லூரி, கொழும்பு – | 24 | 85 |

ஆசிரியர் ஆளணியினருக்குரிய நிதி ஒதுக்கீட்டில் வேறுபாடுகள் காணப்படுதல் பாடசாலைகளுக்கிடையே தரவேறுபாடுகளை உருவாக்கும் என்பதில் மறுக்க முடியாது. வாய்ப்பு வசதிகள் கொண்ட பாடசாலைகள் என்றும் வாய்ப்பு வசதிகள் குன்றிய பாடசாலை என்றும் சமூக வர்க்க நிலை சார்ந்த கல்வி அமைப்பு தொடர்ந்தும் பேணப்பட்டே வருகின்றன.

மேலும் புதிய கல்வி வெள்ளை அறிக்கையிலே தனியார் பாடசாலைகள் இயங்க அனுமதி அளிக்கப்படுதலும் "ஒற்றை நிலைப் பாடசாலைகள் என்ற பெயரிலே வசதிகள் மிக்குடைய தேசிய கல்லூரிகள் செயலாற்ற விடப்படலும் தனியார் கல்லூரிக்கு அரசாங்க நிதி உதவி வழங்கப்படுதலும் கல்வி வழங்கலிலே வர்க்க சார்புடைமையை எடுத்துக் காட்டுகின்றன. இதனால் கல்வித் தரத்தைப் பொறுத்தவரை வாய்ப்புக்கும் வாய்ப்பின்மைக்கும் இடையே இடைவெளி விரிவடைகின்றது.

கல்வித்தர வீழ்ச்சி ஆசிரிய ஆளணியினரது அமைப்பு முறையாலும் ஏற்படுகின்றது. வாண்மைப் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் மிகக்குறைந்த அளவிலேயே ஆசிரியர் சேவையிற் காணப்படுகின்றனர். 1971ம் ஆண்டில் மார்க்க நிறுவனம் மேற்கொண்ட கணிப்பில் மொத்தம் 90, 625 ஆசிரியர்கள் எவ்வித பயிற்சியுமற்றோராய் ஆசிரியர்? தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்பது தெரியவருகின்றது.

கல்வியில் "விரயம்" என்பது தொடர்ச்சியாகக் காணப்படும் பண்பாகவுள்ளது. விரயம் என்பது மாணவர்கள் முழுமையாக கல்விப் பயனைப் பெறாது வெளிநீங்குதலும், கற்ற வகுப்பிலே மீளக்கற்றலும் என்றவாறு விரித்துரைக்கப்படத்தக்கது. மாணவர்களுள் வெளிநீங்கியோர் சென்றபின் மீதியாக பின்தங்கியோர் வீதங்கள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை பின்வரும் தரவுகள் காட்டுகின்றன.

**நிதிஒதுக்கீட்டில் வேறுபாடுகள் பாடசாலைகளிடையே தரவேறுபாடுகளை உருவாக்குகின்றது.**

| வகுப்பு | பின்தங்கியோர் வீதம் (அடிவகுப்பு ஒன்று 100 எனப்படும்) |
|---|---|
| 1A | 100.00 |
| 1B | 90.00 |
| 2 | 88.16 |
| 3 | 73.27 |
| 4 | 64.26 |
| 5 | 52.88 |
| 6 | 46.84 |
| 7 | 41.24 |
| 8 | பெறப்படவில்லை |
| 9 | 36.00 |
| 10 | 33.04 |
| 11 | 1.98 |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கையின் பொய் பிரச்சாரம் அனுப்பத் துடிக்கிறது சுவீடன் உயிருக்குப் போராடும் தமிழ் இளைஞன்

(4 மார்ச்)

தன்னைத் திருப்பி அனுப்ப வேண்டாம் என்ற கோரியும் எதையும் கருத்திற் கெடுக்காமல் திருப்பி அனுப்ப விளைந்தது சுவீடன் குடிவரவுத் திணைக்களம். திருப்பி அனுப்பினால் என்ன நடக்கும் என்பதை நன்கு உணர்ந்திருந்தார். அந்தத் தமிழ் அகதி பெயர் இன்னமும் அறியப்படவில்லை ஆனால் பெற்றோல் ஊற்றி கொழுத்தும் அவல நிலைக்கு ஆளானார். அந்த 36 வயது நிரம்பிய தமிழீழத்தவர் அப்சல ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கப்படும் இவர் இன்னமும் மயக்க நிலையிலேயே இருக்கின்றார்.

ஸ்ரொக்கோம் இடத்திலிருக்கும் ஸ்ரீலங்கா தூதராலயம் கொழும்பு தமிழர்களுக்க பாதுகாப்பான இடம் என்று கூறுகின்றது. சுற்றுலாவை அதிகரிக்கச் செய்யும் ஏடுகள் மூலம் கொழும்பை பாதுகாப்பான இடமாக தீவிரமாக பிரச்சாரம் செய்யும் இன அழிப்பு அரசின் தூதராலயம் தமிழர்களின் உயிரைக் குடிக்கும் அளவுக்கு பிரச்சாரம் செய்திருக்கிறது.

ஸ்ரீலங்காவின் பிரச்சாரத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டு முடிவு எடுக்கும் சுவீடன் அரசு தமிழர்கள் உண்ணா விரதத்திலிருந்து தீக்குளிக்கும் நிலையை அடைவது வரை போக வைத்திருக்கிறது.

கொழும்பில் ஈழத்தமிழர்கள் நடமாட முடியாது. எங்களின் குழுக்களும் சிவிலுடை பொலிஸ், இராணுவமும் ஆயிரக்கணக்கில் இளைஞர்களைப் பிடித்தும் சொய்வதும் நாளாந்த விடயம். தமிழர்கள் பீதியுடன் தான் கொழும்பில் திரிகின்றார்கள். திடீர் திடீர் என்று காணமால் போகின்றார்கள். இத்தனைக்கும் மத்தியிலும் கொழும்பை பாதுகாப்பான இடமாக பிரச்சாரம் செய்கின்றது ஸ்ரீலங்கா.

இந்தப் பிழையான தகவலை வைத்துக் கொண்டு தொடர்ச்சியாக திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளான சுவீடன் அரசு மேற் கொள்வது யாவரும் அறிந்ததே.

தமிழ் அகதிகள் அபாயத்தில் உள்ளார்கள். உயிரை தீயிட்டு போக்கும் நிலைக்கு அவர்கள் மனநிலை போயிருக்கிறது. ஒருபக்கம் இயக்கங்கள் இன்னொரு பக்கம் அரசு என்று தவிக்கும் மக்களோடு அகதிகளையும் சேர்க்க நினைக்கிறது சுவீடன். தமிழ் அகதிகளை திருப்பி அனுப்ப வேண்டாம் என்று கோரி குடிவரவு அமைச்சருக்கு உங்கள் எதிர்ப்பை அனுப்புங்கள்.

முகவரி: Minister of Immigration
Ms Birgit Friggebo
103-33 Stockholm
Forn: 46 8 216813

## சுண்டிக்குளம் கடற்பகுதியல் ஆக்கிரமிப்பு அரசால் கொல்லப் பட்டோர் விபரம்

யாழ் குடாவின் கிழக்குப் பகுதியல் அமைந்திருக்கும் பூனைத் தொடுவாய் கடற் பரப்பில் கட்டு மரங்களில் சென்று மீன் பிடித்த அப்பாவிப் பொது மக்கள் மீது கடலில் வந்த படையினர் கண்மூடித் தனமாகத் தாக்கியதில் ஸ்தலத்திலேயே 3 பேர் உயிரிளந்துள்ளார்கள். எஞ்சிய ஏழுபேருக்கு என்ன நடந்தது என்று இன்னமும் தெரியவில்லை. ஆனால் இவர்கள் சென்ற கட்டு மரங்கள் வெறுமனே ஒதுங்கியதால் இவர்களும் கொல்லப் பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. புலிகளை மட்டுமே அரசு கொல்கிறார்கள் என்று அரசுக்கு வால்பிடிக்கும் எங்கள் தம்பிமாரிடம் இது பற்றி கேட்ட போது மௌனமாக மாறிவிட்டாரகளாம்.

இத் தாக்குதலில் உயிரிளந்தோர் விபரம்.
யாக்கோப் பிள்ளை நிக்சன் (21)
அமிர்தலிங்கம் ஜோன் பெர்னாந்தோ (32)
யேசு சாந்த குமார் (23)
காணாமல் போனோர் விபரம்
யாக்கோஸ் பிள்ளை (45)
பாபா(21)
யேசுஜெயா (18)
இமானுவேல் பிள்ளை மரியசீலன் (25)
கபிரியோல் பிள்ளை ஜெயசீலன் (25)
ஆசீர்வாதம் மரிசிலீன் (42)

இவர்கள் உண்மையிலேயே மீனவர்கள் என்று தெரிந்தும் படையினர் பலியாடியதை அரசு புலிகள் பலி என அறிக்கை வெளியிட்டுள் ளனர்.

இத்தகைய படுகொலைகள் பல நடந்தும் கண்மூடித்தனமாக வெளிநாடுகளில் இருந்து சிலர் வெளியிடும் கருத்துக்களால் இலங்கையிலிருந்து வெளியேறிய அகதிகள் பொருளாதார அகதிகளே என்கிறார்கள்.

## லண்டன் விமான நிலையத்தில் மோட்டார் குண்டு

கடந்த புதன் கிழமையும், வியாழக் கிழமையும் ஐரிஸ் புரட்சிகர ராணுவத்தினர் உலகத்தின் கூடுதலான விமானங்கள் வந்திறங்கும் விமான நிலையமான ஹீத்துறு மீதே இந்த மோட்டார் தாக்குதலை நடாத்தியுள்ளனர். இத் தாக்குதல்களின் போது எந்த ஒரு குண்டும் வெடிக்கவில்லை. முதல் நாள் நடைபெற்ற தாக்குதலின் போது விமான ஓடுபாதையிலேயே குண்டுகள் போய் விழுந்துள்ளது. அன்றையதினம் பல விமானங்கள் ரத்துச்செய்யப்பட்ட போதும். விமான நிலையத்தை முற்றாக முடவில்லை. ஆனால் வியாழன் அன்று நடை பெற்ற தாக்குதலால் 4ம் பிரிவு விமான நிலையம் முற்றாக மூடப்பட்டதுடன் 25க்கும் மேற்பட்ட விமானங்கள் ரத்துச் செய்யப்பட்டது. இது ஐரிஸ் விடுதலை இராணுவத்துக்கு கிடைத்த வெற்றி என்றே பேசப்படுகிறது.

### தென் ஆபிரிக்காவில் பல் இனமக்களின் தேர்தல்

தென் ஆபிரிக்காவின் முதன் முதலாக பல இனமக்களின் பொது தேர்தல் இவ்வருடம் சித்திரை மாதம் நடக்க இருக்கின்றது. இதில் மிகப் பிரதான கட்சியான ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் (ANC) மற்றும் ஆட்சியில் உள்ள வெள்ளையர்களின் கட்சியான பிரிட்டோரியா அரசும் அடங்கும். இதில் அடுத்து வரும் பிரதான கட்சியான 'இங்கட்டா சுதந்திர கட்சியும், கன்சர்வேட்டி கட்சியும் இத்தேர்தலை புறக்கணிப்பதாக கூறியுள்ளனர்.

### ரஷ்யாவின் பொருளாதார சீர்திருத்தம்

சோவியத் யூனியனின் உடைவிற்கு பின்பு பல அரசியல் நெருக்கடியை சந்தித்த பெரிஸ்சி யெல்சின் தலைமையான ரஷ்சிய அரசு மேற்கத்திய மற்றும் அமெரிக்க நாடுகளின் உதவியுடன் அரசை பொருளாதார சீர் திருத்தம் என்ற முறையில் எப்படியோ நாட்களை கடத்திய வண்ணம் இருக்கின்றது. மேற்கத்திய பாணியில் நாட்டை அமைக்க முயற்சியில் ஒருபுறம் கொலை, கொள்ளை, போதைவஸ்து, விபச்சாரம் மறுபுறம் வளர்த்து வரும் தேசிய வெறியர்கள் (NEO NASZ) இன் ஒருபுறம் மிஞ்சி இருந்து வளர்ந்து வரும் சோவியத் கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக மூச்சித் திணற போராடிக்கொண்டு இருக்கிறார் இதற்கிடையில் இன்னும் ஒரு பேர் அதிர்ச்சி காத்திருக்கின்றது என்ன வென்றால் ஐரோப்பிய அமெரிக்க பொருளாதார 'அரசியல் அவதானிகளின் எச்சரிக்கை தான் அது. பொருளாதார சீர்திருத்தம் தோல்வி அடையும் நிலையில் இருப்பதால் உடனடியாக சீர் அமைக்கும் முயற்சியில் ஈடுபடாவிட்டால் நிலைமை மேலும் மோசமாகவும் மீண்டும் ஒரு OCTO 17 புரட்சிக்கு வாய்ப்பை ஏற்படுத்தி கொடுப்பதாக அமையும் என்று எச்சரித்துள்ளது இல்லையென்றால் மேற்கத்திய நாடுகளும் அமெரிக்காவும் ராஷ்யாவைப் பற்றிய கற்பனை ஒரு கெட்ட கனவாக அமைந்து விடும் என்று கூறியுள்ளனர்.

# விளையாட்டுச் செய்திகள்

### கிழக்கு லண்டன் தமிழ் உதைப்பந்தாட்ட அணி வெற்றி:

கிழக்கு லண்டன் தமிழ் அணிக்கு எதிரான விம்பிள்டன் விளையாட்டு கழகத்திற்கு இடையில் 20-2-94ல் கிழக்கு லண்டனின் இடம் பெற்ற போட்டியில் விம்பிள்டன் அணி தோல்வியுற்றது.

இரு அணிகளின் விளையாட்டும் ஆரம்பத்தில் விறு விறுப்பாக காணப்படவில்லை இருப்பினும் முதலில் விம்பிள்டன் அணி கோலை போட்டது. இடை வேளைக்கு பின்னர் கிழக்கு அணியினர் மிகவும் சிறப்பாக விளையாடி 3 கோல்களை போட்டனா.

### ரூற்றீங் புளூஸ் உதைப்பந்தட்ட அணிக்கு வெற்றி மேல் வெற்றி.

கடந்த இரு மாத காலமாக நடைபெற்று வரும் இலங்கை விளையாட்டு கழகங்களுக் இடையில் ஆனா உதைப்பந்தாட்ட லீக் போட்டியில் ரூற்றீங் அணி முன்னணியில் உள்ளன. 20-2-94ல் ஞாயிற்றுக்கிழமை புளூஸ் அணிக்கு எதிரான பிளஸசந் போட்டியில் புளூஸ் அணி 11-0 என்ற கோல்கள் அடிப்படையில் பிளங்சந் அணியை மண்கவ்வ வைத்து புளூஸ் அணி லண்டனில் பல வருட காலமாக உதைபந்தாட்ட போட்டிகளில் பங்கு பற்றி வருகின்றது.

### உதை-பந்தாட்டத்தில் உதை பட்டுக்கொண்டனர்

ரூற்றீங் புளூஸ் எதிர் லூசியம் அணிகளுக்கு இடையிலான உதைப்பந்தாட்ட லீக் போட்டியில் உதை பட்டு கொண்டனர்!! ஆட்டம் 10 நிமிடங்களுக்கு முன்னதாக நிறுத்தப்பட்டது. 30-02-94இல் லூசியம் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டி பார்வையாளர் களுக்கிடையில் ஏற்பட்ட மோதல் காரணமாக இடை நிறுத்தப்பட்டது.

மிகவும் உணர்ச்சி பூர்வமாக ஆரம்பித்த இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைக்காமல் விளையாடினர். இருப்பினும் ரூட்டிங் அணி வீரர்கள் சிலர் சட்ட விதிகளுக்கு முரணாக விளையாடியமையால் மத்தியஸ்தர் மூலமாக இருவர் வெளியேற்றப்பட்டனர். ரூட்டிங் அணியினர் பின்னர் 9பேருடன் மட்டுமே விளையாடினர். இருப்பினும் ஆட்டம் இடைநிறுத்தும் போது லூசியம் அணி 4க்கு 3கோல் அடிப்படையில் முன்னணியில் நின்றது குறிப்பிடத் தக்கது.

### சேபிட்டன் அணி ரூட்டிங் அணியை தோற்கடித்தது.

6-2-94இல் நடைபெற்ற போட்டியில் சேபிட்டன் அணி திறமையாக விளையாடி மூன்று கோல்கள் வித்தியாசத்தில் ரூட்டிங் புழூஸ் அணியை தோற்கடித்தனர். பல தடவைகள் ரூட்டிங் அணியினருக்கு கோல் போட சந்தரப்பம் கிடைத்தும் அதை நழுவ விட்டனர். பல போட்டிகளில் முன்னணியில் நின்ற ரூட்டிங் அணியினர் கடந்த இரண்டு ஆட்டத்திலும் தோல்வியை சந்தித்துள்ளனர். இதனால் லீக் சம்பியன் கிண்ணத்தை இம்முறையும் கைப்பற்ற முடியுமா என சந்தேகம் எழுந்துள்ளது.

### விம்பிள்டன் அணிக்கு எதிர்பாராத வெற்றி

7-03-94இல் விம்பிள்டன் மைதானத்தில் பிளசற் அணிக்கு எதிராக இடம்பெற்ற போட்டியில் விம்பிள்டன் அணி 7-0 கோல்கள் வித்தியாசத்தில் அமோக வெற்றியீட்டியது. கடந்த காலங்களில் சிறப்பாக விளையாடிய விம்பிள்டன் அணி கடந்த இரண்டு போட்டியில் தோல்வியை சந்தித்தது. இதில் ரூட்டிங் அணியினரிடம் 8-0 வித்தியாசத்தில் படுதோல்வியை சந்தித்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்